தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மானிய விலையில் மாட்டுத் தீவனம் திட்டம்

**திருத்தணி,**

திருத்தணியை அடுத்த கனகம்மாசத்திரத்தில் மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்கும் திட்டத்தை வருவாய்த்துறை அமைச்சர் பி.வி.ரமணா தொடங்கி வைத்தார்.

தமிழக விவசாயிகள் பருவமழையை நம்பியே விவசாயம் செய்து வருகின்றனர். பருவமழை பொய்க்கும் காலங்களில் வறட்சி ஏற்பட்டு விவசாயம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. இந்நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளாக வெயிலின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் பெருவாரியான விவசாயிகள், கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பை முழுநேரத் தொழிலாகவே செய்து வருகின்றனர்.

கால்நடைகளுக்கான தீவனப் பற்றாக்குறையை தீர்க்க, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் தீவன மையங்கள் அமைத்து விவசாயிகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.இதன்பேரில் நாமக்கல் மாவட்டத்தில் 4 இடங்களில் உள்ள கால்நடை உலர் தீவன மையங்கள் மூலம் மானிய விலையில் தீவனங்களை விவசாயிகளுக்கு வழங்க தமிழக அரசு முடிவு செய்தது.

இதன் மூலம் கால்நடை ஒன்றுக்கு நாள்தோறும் 3 கிலோ வீதம் 7 நாள்களுக்கு உரிய தீவனம் ஒரே நேரத்தில் வழங்கப்படும் என தமிழக அரசு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் திருத்தணியை அடுத்த திருவாலங்காடு ஒன்றியத்துக்கு உள்பட்ட கனகம்மாசத்திரம் கிராம கால்நடை மருந்தகத்தில், மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் விழா நடைபெற்றது.விழாவுக்கு மாவட்ட ஆட்சியர்

கொ.வீரராகவராவ் தலைமை வகித்தார். ஒன்றியக்குழுத் தலைவர் எம்.குணாளன், துணைத்தலைவர் முத்துகொண்டாபுரம் ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் வி.பன்னீர்செல்வம் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற வருவாய்த்துறை அமைச்சர் பி.வி.ரமணா, விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ.2 வீதம் உலர் தீவனம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியது:

சென்னையை தவிர, ஏனைய 31 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அமைச்சர் குழுவினரை அனுப்பி, நிவாரணத் தொகையையும் வழங்கி வருகிறார்.

இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது. தற்போது தொடங்கப்பட்டிருக்கும் மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்கும் திட்டத்தால் எண்ணற்ற விவசாயிகள் பயன்பெறுவர்.

மேலும் அந்தந்த மாவட்டங்களில் கிடைக்கக்கூடிய உலர் தீவனங்களைக் கொண்டு தீவன வங்கியை இயக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றார் அவர். திருத்தணி ஆர்.டி.ஓ. (பொறுப்பு) ரா.அபிராமி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

**மக்காசோளம் மகசூல் போட்டி**

**பழனி,**

பழனி அருகே பாலசமுத்திரத்தில் மக்காச்சோளம் விளைச்சல் போட்டி நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே பாலசமுத்திரம் கிராமத்தில் மக்காச்சோளம் விளைச்சல் போட்டி நடைபெற்றது. மக்காச்சோளம் உயர்

ரகங்களை சாகுபடி செய்த ராமசாமி, ராம்குமார் ஆகியோரின் வயல்களில் இப்போட்டி நடத்தப்பட்டது.  திண்டுக்கல் மாவட்ட வேளாண் துணை இயக்குநர் தங்கசாமி மாநில நடுவராகவும், மடத்துக்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் மற்றும் ராஜசேகர் ஆகியோர் மாவட்ட நடுவர்களாகவும் இருந்தனர். முன்னோடி விவசாயிகள் தியாகராஜன், பகவதி ஆகியோர் முன்னிலையில் பயிர் அறுவடை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.  அறுவடை ஏற்பாடுகளை பழனி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி தலைமையில் வேளாண்மை அலுவலர்கள் கணேசன், துரைச்சாமி, ராஜாசேட், முரளிதரன் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் கோசல்நாத், சரவணக்குமார், மணிகண்டராஜா உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.

**வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை சரிவு**

**தேனி,**

தேனி உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிந்துள்ளது. தேனி உழவர் சந்தையில் புதன்கிழமை 30 டன் காய்கறி வரத்து இருந்தது. கடந்த சில நாள்களாக உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து அதிகமாக உள்ளதால் விலை சரிவு ஏற்பட்டுள்ளது.

விலை விபரம்(கிலோ ரூபாயில்):

தக்காளி- 5, புடலங்காய்-14, கொத்தவரை-28, பாகற்காய்-30, சுரைக்காய்-8, பீட்ரூட்-12, பூசணி-8, நூக்கல்-12, முள்ளங்கி-10, பச்சைமிளகாய்-18, முட்டைக்கோஸ்-8, கத்தரிக்காய்-20, டர்னிப்-15, வெண்டைக்காய்-40, காலிபிளவர்-12 , பப்பாளி-15 , உருளைக்கிழங்கு-20, சின்னவெங்காயம்-20, பெல்லாரி-16, காரட்-14 , பட்டர்பீன்ஸ்-80, சோயாபீன்ஸ்-60, மரவள்ளி-20, கீரை-5. தேங்காய் ஒன்று ரூ.10 முதல் 15 வரை விற்பனையானது.

**தோட்டக்கலை தொழில் நுட்ப பயிற்சி**

**காரியாபட்டி,**

விருதுநகர் மாவட்டம் கோவிலாங்குளம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக அறிவியல் மையத்தில், தோட்டக் கலைத் துறை சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், சுமார் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, தோட்டக் கலை தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் பல்கலைக் கழக முனைவர் பால்பாண்டி தலைமை வகித்தார். உதவி பேராசிரியர்கள் தீபாகரன், ஜெகதீஸ்வரி, ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். வேளாண் இணை இயக்குநர் முத்துமுனியாண்டி, நடமாடும் மண் பரிசோதனை மூத்த அலுவலர் சுப்பாராஜ் ஆகியோர் பேசினர்.

**விதை கிராம திட்டப் பயிற்சி**

**காரியாபட்டி,**

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி பகுதி உசிலங்குளம் கிராமத்தில் வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கான எண்ணெய் வித்து நிலக்கடலை பயிருக்கு விதை கிராம திட்டப் பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை உசிலங்குளம் ஊராட்சித் தலைவர் இந்திரா துவக்கி வைத்ருதுநகர் துப் பேசினார். விதை கிராமத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்த தொழில் நுட்பங்களை நரிக்குடி வேளாண் உதவி இயக்குநர் துரை கண்ணம்மாள் எடுத்துரைத்தார். வேளாண் அலுவலர் சாய்லெட்சுமி சரண்யா நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி பேசினார். வேளாண் துணைஅலுவலர் நாராயணன் விதை கிராமம் அமைப்பது குறித்து எடுத்துக் கூறினார். விதை நேர்த்தி மற்றும் உயிர் உர விதை நேர்த்தி குறித்த செயல் விளக்கங்கள் உதவி வேளாண் அலுவலர்களால் விளக்கப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை முத்துவேல், ஊர்க்காவலன், இளங்கோவன், மெய்யழகன் செய்திருந்தனர்.

**தாராபுரத்தில் நெல் அறுவடை பணி துவக்கம்**

**தாராபுரம்,**

தாராபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நெல் அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பழைய மற்றும் புதிய அமராவதி பாசனத்தின்கீழ் தாராபுரம், கொளிஞ்சிவாடி, அலங்கியம், வீராச்சிமங்கலம் உள்பட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 4 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர்களில் நெல் பயிரிடப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு கடும் வறட்சியால் இப் பகுதிகளில் நெல்நடவு செய்யப்படவில்லை. நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாரானது.

இதைத் தொடர்ந்து, இயந்திரம் மூலம் அறுவடை பணி துவங்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு 61 கிலோ கொண்ட 40 மூட்டைகள் மகசூல் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டுகளில் 1 மணி நேரத்திற்கு அறுவடை இயந்திரத்திற்கு ரூ.1,200 வசூலிக்கப்பட்ட நிலையில், தற்போது டீசல் விலை உயர்வு காரணமாக அதன் வாடகை ரூ.1,500 ஆக உயர்ந்துள்ளது.

**பீன்ஸ் விலை உயர்வு**

**ஈரோடு,**

வரத்து குறைவு காரணமாக பீன்ஸ் விலை உயர்ந்துள்ளது.

ஈரோடு நேதாஜி காய்கறிச் சந்தையில் ஞாயிற்றுக்கிழமை பீன்ஸ் கிலோ ரூ.40-க்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் ரூ.20-க்கு விற்ற பீன்ஸ், தற்போது விலை அதிகரித்து உள்ளது. ஒசூர், பெங்களூரில் இருந்து பீன்ஸ் ஈரோடு சந்தைக்கு கொண்டு வரப்படுகிறது.

வரத்து குறைந்துவிட்டதால் பீன்ஸ் விலை உயர்ந்துள்ளதாக காய்கறி வியாபாரிகள் தெரிவித்தனர். மேலும், வெண்டைக்காய் விலையும் உயர்ந்துள்ளது. ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ.34 வரை விற்கப்பட்டது. மற்ற காய்கறிகளின்

விலையில் பெரிய அளவுக்கு மாற்றம் இல்லை. தக்காளி கிலோ ரூ.6க்கும், கேரட் ரூ.20க்கும், பெரிய வெங்காயம் ரூ.15க்கும், சின்ன வெங்காயம் ரூ.17க்கும், கத்தரிக்காய் ரூ.20க்கும் விலைபோனது. மழையின்மை, மூடுபனியால் பீன்ஸ், வெண்டைக்காய் விளைச்சல் குறைந்துவிட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.22 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ.22 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் போனது.

இங்கு புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப் பகுதி விவசாயிகள், 574 மூட்டைகளில், 28 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 79.35க்கும், அதிகபட்சமாக ரூ. 80.65க்கும் விற்பனையானது.

இரண்டாம் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ.50.50-க்கும், அதிகபட்சமாக ரூ. 78.50-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.22 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.98 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 42.98 அடியாக இருந்தது.அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 452 கன அடி வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 250 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 2.90 டி.எம்.சி.

**மோர்தானா அணை 4 நாள்களுக்குத் திறப்பு: ஆட்சியர் தகவல்**

**வேலூர்,**

தற்போது நிலவும் கடும் வறட்சி மற்றும் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் முதல்வரின் உத்தரவுப்படி குடியாத்தம் வட்டம், மோர்தானா அணை திங்கள்கிழமை காலை 8 மணிக்கு திறக்கப்படுகிறது என்று ஆட்சியர் இரா.நந்தகோபால் தெரிவித்தார்.

இதுகுறித்து அவரது செய்திக் குறிப்பு: மோர்தானா அணையில் இருந்து திங்கள்கிழமை காலை 8 மணியளவில் விநாடிக்கு 175 கனஅடி நீர் கவுண்டன்யா ஆற்றில் திறந்துவிடப்படவுள்ளது. கவுண்டன்யா ஆற்றின் இருபுறமும் உள்ள 20 கிராமங்கள் பயனடையும் வகையில் விநாடிக்கு 175 கன அடி வீதம் வரும் 21-ம் தேதி காலை 8 மணி வரை தண்ணீர் தொடர்ந்து விடப்படும்.

இதன் மூலம் குடியாத்தம் நகரம் மற்றும் மோர்தானா, கொட்டார மடுகு, ஜிட்டப்பள்ளி, சேம்பள்ளி, ஜங்காலப்பள்ளி, உப்பரப்பள்ளி, தட்டப்பாறை, ஆண்டிகான்பட்டி, ரங்கசமுத்திரம், ரேணுகாபுரம், அக்ராவரம், பெரும்பாடி, கொல்லைமேடு, மீனூர், மூங்கப்பட்டு, மேட்டுக்களம், சீவூர், போடிப்பேட்டை, தாழையாத்தம் ஆகிய கிராமங்களில் உள்ள 202 ஆழ்துளை கிணறுகள் மற்றும் 1932 விவசாய கிணறுகளின் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது.

**நாக்பூரில் தேசிய வேளாண் கருத்தரங்கு விவசாயிகளுக்கு காணொளிக் காட்சியில் விளக்கம்**

**ஆரணி,**

நாக்பூரில் உள்ள மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய அளவிலான வேளாண் கருத்தரங்கு மற்றும் கண் காட்சி ஆரணி பகுதி விவசாயிகளுக்கு காணொளிக் காட்சியில் காண்பிக்கப்பட்டது.

இக்கண்காட்சியினை பார்த்த விவசாயிகள் கேட்ட கேள்விகளுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வே.சத்தியமூர்த்தி பதிலளித்தார்.வேளாண்மை

அலுவலர்கள் பா.கார்த்தியாயினி, பவித்ரா தேவி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சதீஷ்குமார் உள்ளிட்டோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

## இலவச கால்நடைப் பாதுகாப்பு மருத்துவ முகாம்

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு அருகேயுள்ள கருப்பகவுண்டம்பாளையத்தில் கால்நடை பாதுகாப்பு இலவச மருத்துவ முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ரோட்டரி சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமை அதன் தலைவர் டாக்டர் அன்பழகன் தொடக்கிவைத்தார். செயலர் கார்த்திகேயன், பொருளர் பழனிவேலு, முன்னாள் தலைவர் வையாபுரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோழிக்கால் நத்தம் கால்நடை மருத்துவமனை டாக்டர் பி. அர்த்தநாரீஸ்வரன் கலந்து கொண்டு, கால்நடைகள், கோழிகள் ஆகியவற்றிற்கு சிகிச்சை அளித்தார்.

மாடு, ஆடுகளுக்கு குடல்புழு நீக்கம், கோழிகளுக்கு ராணிகெட் நோய்க்கு தடுப்பு சிகிச்சை, மலடு நீக்க ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்கு சிகிச்சை, பால் உற்பத்தியை அதிகரிக்க சிகிச்சை ஆகியவை வழங்கப்பட்டன. ரூ.5500 மதிப்புள்ள மருந்துகள் ரோட்டரி சங்கம் சார்பில் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இந்த முகாம் மூலம் சுமார் 200 பேர் பயனடைந்தனர்.

## நாட்டுக் கோழி வளர்ப்பு பண்ணைப் பள்ளி பயிற்சி

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு அருகேயுள்ள ஆனங்கூரில் அட்மா திட்டத்தின் கீழ் கால்நடைத் துறை மூலம் நாட்டுக் கோழி வளர்ப்பு பற்றிய பண்ணைப் பள்ளி பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

பயிற்சியில் நாட்டுக் கோழி ரகங்களைத் தேர்வு செய்வது பற்றியும், புழக்கடையில் நாட்டுக் கோழி வளர்ப்பு பற்றியும், கோழிகளுக்கு தீவனம் தரும் முறைகள்

குறித்தும் விவசாயிகளுக்கு கணினி திரை மூலம் பயிற்சி வழங்கப்பட்டது. இதை டாக்டர் கெப்தம் வழங்கினார்.

நாட்டுக் கோழி வளர்ப்பு பற்றிய கையேடுகள் வழங்கப்பட்டன. வேளாண் துறை மூலம் உள்ள மானியத் திட்டங்கள் குறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் நமச்சிவாயம் எடுத்துரைத்தார். அட்மா திட்டத் தொழில் நுட்ப மேலாளர் பன்னீர்செல்வம், தொழில்நுட்ப வல்லுநர் ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மஞ்சளுக்கு அதிக விலை: விவசாயிகள் மகிழ்ச்சி**

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் பனங்காளி ரகத்துக்கு அதிக விலை கிடைத்தது.

இந்த விற்பனைச் சங்கத்துக்கு 1000 மூட்டைகள் மஞ்சள் விற்பனைக்கு வந்தன. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.

இந்த மஞ்சளைக் கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 25-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலம் மூலம் ரூ.60 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.7500 முதல் ரூ.8300 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.6450 முதல் ரூ.7040 வரை விலை போனது. பனங்காளி ரகம் ரூ.11200 முதல் ரூ.12500 வரை விற்பனையானது. மஞ்சளுக்கு கூடுதல் விலை ரூ.1200 முதல் ரூ.1500 வரை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இதை சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

**கீரை மற்றும் காய்கறிகளில் மதிப்பு கூட்டு பொருள்கள் தயாரிப்பு: விவசாயிகள்,விஞ்ஞானிகள் கலந்துரையாடல்**

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டையில் வெள்ளிக்கிழமை ஆத்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் திருமயம் பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையம் இணைந்து நடத்திய கீரை மற்றும் காய்கறிகள் மதிப்பு கூட்டுதல் குறித்த விவசாயிகள்,விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆத்மா திட்ட இயக்குநர் கா.மு.ஷாஜகான் தலைமை வகித்தார். புதுக்கோட்டை வேளாண்வணிக துணை இயக்குநர் நா.அண்ணாமலை, தமிழ்நாடு வேளாண்பல்கலை கழகத்தின் மதுரை மனையியல் கல்லூரி பேராசிரியர் பார்வதி ஆகியோர் பங்கேற்று கீரைகள் மற்றும் காய்கறிகளில் உள்ள சத்துக்கள் குறித்துசிறப்புரையாற்றினர். மேலும் முருங்கையிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களான முருங்கை இலை பொடி, முருங்கை இலை சப்பாத்தி மாவு, முருங்கை இலை ஊறுகாய், முருங்கை இலை சேமியா தயாரிக்கும் முறைகள் பற்றி எடுத்துக்கூறி விவசாயிகளின் கேள்விகளுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி, குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் மூலம்அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்தும்,விற்பனைக்குழு செயலர் கௌசல்யாமோகன், விற்பனைகுழு மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்குறித்தும்,ஆத்மா மாவட்ட இணைப்பு அலுவலர் ஆர்.ஜெகதீஸ்வரி ஆத்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்ட செயலாக்கம் குறித்து எடுத்துரைத்தனர்.

முன்னதாக, திருமயம் வேளாண் உதவி இயக்குநர் கோ.ராமமூர்த்தி வரவேற்றார். வேளாண்அலுவலர் சு.ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண்வணிகப்பிரிவு அலுவலர்கள் செய்திருந்தனர். இதில், திருமயம், புதுக்கோட்டை, திருவரங்குளம், அறந்தாங்கி வட்டார விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 50.97 அடி**

**தஞ்சாவூர்,**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 50.97 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 169 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து நொடிக்கு 1,801 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**காடு விளைஞ்சென்ன... கையும் காலும்தானே மிச்சம்!**

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் வாழைப் பயிர் ரகங்கள் அறுவடை தொடங்கியுள்ளது. அதிக விளைச்சல் இருந்தும், அதுவே விலையின்மைக்கும் காரணமாகிவிட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாமிரவருணி பாசனத்தில் நெல்லுக்கு அடுத்தபடியாக வாழைப் பயிர் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, சேரன்மகாதேவி, கோபாலசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், வள்ளியூர், களக்காடு பகுதியில் வாழை ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஏத்தன், ரசகதலி, ரோபஸ்டா வாழைப் பயிர்கள் சாகுபடி செய்தபோதிலும், ஏத்தன் ரக வாழைப் பயிர் 75 சதவிகிதம் பயிரிடப்பட்டுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு 1,200 வாழை நடவு செய்யப்படுகிறது. இப்பாசனத்தில் சாகுபடி செய்யப்படும் ஏத்தன், ரசகதலி வாழை ரகங்களுக்கு கேரளத்தில் வரவேற்பு உள்ளது.

ஏத்தங்காய் சிப்ஸ் போன்ற உணவுப் பொருள்கள் கேரளத்தில் தயார் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தாமிரவருணி பாசனத்தில் சாகுபடி செய்யப்படும் வாழை ரகங்கள் திரட்சியாக இருப்பதால், வியாபாரிகள் ஆர்வத்துடன் கொள்முதல் செய்கின்றனர்.அதிக விளைச்சல்; குறைந்த விலை: தாமிரவருணி பாசனத்தில், நெல்லை மாவட்டத்தில் 15,000

ஏக்கரில் வாழை ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சேரன்மகாதேவி பகுதியில் அறுவடை செய்யப்பட்ட ஏத்தன் வாழைத்தார் திரட்சியாக உள்ளது. கிலோ ஒன்றுக்கு ரூ.16 என விலை நிர்ணயம் செய்து வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர்.

சேரன்மகாதேவி விவசாயி பழனி கூறியதாவது: ஒரு வாழைத்தார் (தண்டு போக) 8 கிலோ முதல் 10 கிலோ வரை உள்ளது. 8 கிலோ உள்ள வாழைத்தாரில் 40 காய்களும், 10 கிலோ உள்ள தாரில் 50 காய்களும் உள்ளன. ஒரு தார் ரூ.128 என்ற விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். ஒரு தார் உற்பத்தி செய்ய ரூ.100 வரை செலவாகிறது. நிகழ் பருவத்தில் வாழைக்கு விலை இல்லை. வாழை 12 மாதப் பருவம் கொண்டது. கடைசி 3 மாதங்கள் இரவு பகலாகப் பாதுகாக்க வேண்டும்; இல்லையெனில் அறுவடை செய்யும் பருவத்தில் வாழைப் பயிரை மாடு போன்ற கால்நடைகள் சேதப்படுத்தி அழித்துவிடும்.

கடந்த ஆணடைவிட இந்த ஆண்டு வாழை விளைச்சல் அதிகமாக உள்ளது. இதனால் கிலோ ரூ.16-க்கு மேல் வியாபாரிகள் தர மறுக்கிறார்கள். கிலோ ஒன்றுக்கு ரூ.30 கிடைத்தால்தான் விவசாயிகளுக்கு லாபம் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாய இடுப்பொருட்களுக்கு ஆன்லைனில் "பில்லிங்' மார்ச்1ல் அமல்**

**திண்டுக்கல்**: வேளாண்மை விரிவாக்க மையங்களில், மானிய விலையில் வழங்கப்படும் விவசாய இடுப்பொருட்களுக்கு, மார்ச் 1 முதல் ஆன்லைனில் "பில்லிங்' செய்யப்பட உள்ளது. தமிழகத்தில் 82 லட்சம் விவசாய பண்ணை குடும்பங்கள் உள்ளன. ஒருபயிர் சாகுபடி, அதிகளவில் ரசாயன உரம்

பயன்படுத்துதல் போன்றவற்றால், 1.26 சதவீதமாக இருந்த மண்ணின் அங்கக சத்து, 0.68 சதவீதமாக குறைந்துள்ளது. இவற்றை தடுக்க, விவசாய நிலங்களின் மண் மாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டு, விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள் வழங்கப்பட்டன. மேலும், அதன் விபரங்கள் அனைத்தும் இன்டர்நெட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த விபரங்கள் அடிப்படையில், வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் இடுப்பொருட்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. மார்ச்1 முதல் மானிய விலையில் வழங்கப்படும் இடுபொருட்களான விதைகள், பூச்சிகொல்லி மருந்துகளுக்கு ஆன்லைனில் "பில்லிங்' செய்யப்பட உள்ளது. விவசாயிகளுக்கு உடனுக்குடன் வாங்கிய பொருட்களுக்கான ரசீது பிரிண்ட் எடுத்து தரப்படும். இதன் மூலம் முறைகேடுகளை தடுக்க முடியும். இடுப்பொருட்கள் இருப்பு விபரம், பற்றாக்குறை போன்ற விபரங்களை சென்னையில் இருந்தப்படியே வேளாண்மை அதிகாரிகள் தெரிந்துகொள்ள முடியும். மேலும், தேவைக்கு தகுந்தாற்போல், இடுப்பொருட்களை அனுப்பி வைக்க முடியும்.

## மேகம் சூழ்ந்திருப்பது ஏன்? : வானிலை மையம் விளக்கம்

**சென்னை:** வங்கக்கடல் பகுதியில் உருவான, காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, 48 மணி நேரத்திற்கு, ஆங்காங்கே லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை காலம் முடிந்த பின்பும், ஒரு சில மாதங்களுக்கு, மழை அவ்வப்போது பெய்யலாம் என்கிறது வானிலை ஆய்வுகள். ஆனால், பருவமழைக் காலம் முடிந்து, ஒன்றரை மாதங்கள் முடிந்த பின்பும், இதுவரை மழை இல்லை மாறாக, மாலை முதல் மறுநாள் காலை வரை கடும் குளிர் நிலவி வருகிறது. இந்நிலையில், நேற்று காலை முதலே, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில், மழை மேகம் சூழ்ந்து காணப்பட்டது. இதற்கு காரணம், வங்கக்கடலில் கடலின் மேல் மட்டத்தில், 5 முதல், 10 கி.மீ., தொலைவில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை என்கிறது, சென்னை வானிலை ஆய்வு மையம்.இதன் காரணமாக, அடுத்த, 48 மணி நேரத்திற்கு, தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில பகுதிகளில், வானம்

மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஆங்காங்கே ஒரு சில பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்புள்ளது என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புது வற்றலுக்கு மவுசு : குவிண்டால் ரூ.**10** ஆயிரம்

**ஆர்.எஸ்.மங்கலம்:** ராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் சந்தையில், புது மிளகாய் வற்றல், ஒரு குவிண்டால், 10 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக விலை போனது. ஆர்.எஸ்.மங்கலம் மிளகாய் சந்தைக்கு, நேற்று, சுற்றுப்புற பகுதிதகளில் இருந்து, பழைய வற்றல், 800 குவிண்டால், புதிய வற்றல், 100 குவிண்டால் அளவிற்கு, விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. கடந்த வாரம், குவிண்டால் (100 கிலோ), 6,000 ரூபாய்க்கு விற்பனையான பழைய வற்றல், நேற்று, 1,000 ரூபாய் விலை குறைந்து, 5,000 ரூபாய்க்கு விற்பனையானது. அதே சமயம், புதிய வற்றல், குவிண்டால், 10,500 ரூபாய்க்கு விற்பனையானது.

**உணவு தானிய உற்பத்தி அதிகரிப்பு வேளாண் உற்பத்தி வளர்ச்சி4.6 சதவீதமாக உயரும்**



**புதுடில்லி**;நடப்பு 2013 14ம் வேளாண் பருவத்தில், நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 26.32 கோடி டன்னாக அதிகரிக்கும் என, இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதையடுத்து, நடப்பு 2013 14ம் நிதியாண்டில், நாட்டின் வேளாண் உற்பத்தி வளர்ச்சி, 4.6 சதவீதமாக உயரும் என, மதிப்பி-

டப்பட்டுள்ளது. இது, கடந்த நிதியாண்டில், 1.9 சதவீதம் என்ற அளவில் மிகவும் குறைந்து காணப்பட்டது.நடப்பு வேளாண் பருவத்தில், நாட்டின் பல மாநிலங்களில், பருவமழை பொழிவு நன்கு இருந்ததால், ஒட்டு மொத்த சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. இதனால், நடப்பு பருவத்தில், உணவு தானிய உற்பத்தி, 26.32 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மத்திய வேளாண் அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, கடந்த வேளாண் பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட, 5.71 கோடி டன் (இறுதி மதிப்பீடு) உணவு தானிய உற்பத்தியை விட, 2.36 சதவீதம் அதிகமாகும்.நடப்பு வேளாண் பருவத்தில் (ஜூலை ஜூன்), நாட்டின் நெல் உற்பத்தி, கடந்த பருவத்தை விட, 0.9 சதவீதம் அதிகரித்து, 10.52 கோடி டன்னிலிருந்து, 10.62 கோடி டன்னாக அதிகரிக்கும்.கோதுமை உற்பத்தி, 2.23 சதவீதம் வளர்ச்சி கண்டு, 9.35 கோடி டன்னிலிருந்து, 9.56 கோடி டன்னாக அதிகரிக்கும். இதர தானியங்கள் உற்பத்தி, 1.07 சதவீதம் அதிகரித்து, 2.98 கோடி டன்னிலிருந்து, 3.01 கோடி டன்னாக வளர்ச்சி காணும்.

மதிப்பீட்டு பருவத்தில், பருப்பு வகைகள் உற்பத்தி, 7.79 சதவீதம் அதிகரித்து, 1.83 கோடி டன்னிலிருந்து, 1.98 கோடி டன்னாக வளர்ச்சி காணும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. ஆக, ஒட்டு மொத்த தானிய உற்பத்தி, 2.36 சதவீதம் வளர்ச்சி கண்டு, 25.71 கோடி டன்னிலிருந்து, 26.32 கோடி டன்னாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எண்ணெய் வித்துக்கள்:எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, 6.59 சதவீதம் அதிகரித்து, 3.09 கோடி டன்னிலிருந்து, 3.30 கோடி டன்னாக அதிகரிக்கும். கரும்பு உற்பத்தி, 4 சதவீதம் வளர்ச்சி கண்டு, 3.41 கோடி டன்னிலிருந்து, 3.55 கோடி டன்னாக அதிகரிக்கும்.பருத்தி உற்பத்தி, 4.03 சதவீதம் வளர்ச்சி கண்டு, 3.42 கோடி பொதிகளிலிருந்து (ஒரு பொதி 170 கிலோ), 356 கோடி பொதிகளாக அதிகரிக்கும் என, மத்திய வேளாண் அமைச்சகத்தின் மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மக்காச்சோளம் ஏற்றுமதி15 சதவீதம் சரிவடையும்



உலக நாடுகளின் போட்டியால், நடப்பு நிதியாண்டில், மக்காச்சோளம் ஏற்றுமதி, 15 சதவீதம் சரிவடையும் என, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபெடா) தெரிவித்துள்ளது.உள்நாட்டில், நடப்பு நிதியாண்டில், மக்காச்சோளம் சாகுபடி பரப்பு, 1 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது, சென்ற நிதியாண்டில், 87 லட்சம் ஹெக்டேராக இருந்தது.இதே போன்று, இதன் உற்பத்தியும், 2.18 கோடி டன்னிலிருந்து, 2.30 கோடி டன்னாக உயரும் என, கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், அர்ஜென்டினா மற்றும் பிரேசில் நாடுகள், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு, குறைந்த விலையில் மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்து வருகின்றன.இதையடுத்து, நம்நாடு, சென்ற ஆண்டு மார்ச் மாதம் முதல் டிசம்பர் வரையில், 30 லட்சம் டன் அளவிற்கே, மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்துள்ளது. எஞ்சியுள்ள நிதியாண்டின் இறுதிக்குள், மேலும், 10 லட்சம் டன் மக்காச்சோளம் ஏற்றுமதி செய்யவே வாய்ப்புள்ளது.இது, கடந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (47.80 லட்சம் டன்) விட, 15 சதவீதம் குறைவாகும் என, ‘அபெடா’ தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, இத்துறையை சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் கூறுகையில், ‘நம்நாட்டின் மக்காச்சோளம் ஏற்றுமதி விலைக்கும், அர்ஜென்டினா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளின் ஏற்றுமதி விலைக்கும், 5 முதல் 7 சதவீதம் வரை வேறுபாடு உள்ளது’ என்று தெரிவித்தார்.–பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து–

## தர்பூசணி விலை கிடு கிடு உயர்வு

**சேலம்:** தமிழகத்தில், கோடை காலம் துவங்கவுள்ள நிலையில், தர்பூசணி விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.திண்டிவனம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, ஊத்தங்கரை, அரூர் போன்ற பகுதிளில் இருந்து, தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கு, தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தற்போது, இந்த பகுதியில், போதிய பருவ மழை பெய்யாததால், விளைச்சல் குறைந்துள்ளது.கடந்த ஆண்டு, ஒரு டன் தர்பூசணி பழம், 6,000 முதல், 7,000 வரை ரூபாய்க்கும், ஒரு கிலோ தர்பூசணி, 10 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு அதிக விளைச்சல் இல்லாததால், தர்பூசணி, ஒரு டன், 10 ஆயிரம் ரூபாயாகி உள்ளது. தற்போது, ஒரு கிலோ தர்பூசணி பழம், 15 ரூபாய் க்கு விற்கப்படுகிறது.

## வாயில்லா ஜீவன்களுக்கு வந்துவிட்டது... ஆபத்து!"போலி' கால்நடை டாக்டர்கள் அதிகரிப்பு

**ஆத்தூர்**: தமிழகத்தில், போலி கால்நடை டாக்டர்கள் அதிகரித்துள்ளனர். இவர்களின் தவறான அணுகுமுறை, சிகிச்சை காரணமாக, ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகள் இறப்பதுடன், மலட்டுத் தன்மை பாதிப்புகள் ஏற்படுவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.சேலம் மாவட்டம், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், விவசாயத்தின் உப தொழிலாக, ஆடு, மாடு, எருமைகள் வளர்த்து வருகின்றனர். மாடுகளை உழவுக்கும், பால் உற்பத்திக்கும், ஆடுகளை இறைச்சிக்கும் பயன்படுத்தி வருகின்றனர். "நடமாடும் வங்கி' என அழைக்கப்படும் கால்நடைகள் வளர்ப்பதில், அதிக ஆர்வம் காட்டுகின்றனர் விவசாயிகள். மேலும், தமிழக அரசின்

விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 19 ஆயிரத்து, 536 பயனாளிகளுக்கு, 24.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 78 ஆயிரத்து, 144 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட ஆடுகள், 75 ஆயிரத்து, 157 குட்டிகளை ஈன்றுள்ளது.மனிதர்களுக்கு நோய் ஏற்படுவது போல், கால்நடைகளுக்கும் நோய் தாக்கம் ஏற்படுகிறது. சில மாதங்களுக்கு முன், சேலம், விழுப்புரம், ஈரோடு, நாமக்கல் உள்பட தமிழகம் முழுவதும், "கோமாரி' நோய் தாக்குதலில், கறவை மாடுகள் அதிகளவில் பலியானது. நோய் பாதிப்புக்குள்ளாகும் கால்நடைகளுக்கு, அரசு கால்நடை டாக்டர்கள் மூலம், சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கால்நடை மருந்தகத்தில், நோய் பாதிக்குள்ளான ஆடு, மாடுகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிப்பதுடன், ஆலோசனை வழங்குகின்றனர். தவிர, இனப்பெருக்க அபிவிருத்திக்கு, சினை ஊசி போடுகின்றனர்.இவர்களை தவிர, கால்நடைகளுக்கு சினை ஊசி போடுவதற்காக, அரசு மூலம் சிலருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள், சினை ஊசி மட்டும் போடலாம்; மற்றபடி சிகிச்சை எதுவும் மேற்கொள்ளக் கூடாது. கால்நடை துறை மூலம், உயர் ரக விந்து கொள்முதல் செய்து கொள்ளவும், இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள், சினை சம்பந்தமான விவரம், ஆலோசனை மட்டுமே வழங்க முடியும்.ஆனால், கால்நடைகள் அதிகளவில் உள்ள, ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் யூனியனுக்கு உட்பட்ட கிராமங்களில், போலி கால்நடை டாக்டர்கள், அதிகளவில் உள்ளதாக புகார் எழுந்துள்ளது. கால்நடை டாக்டர் படிப்பு முடித்தவர்கள் போல், கால்நடைகளுக்கு சினை பரிசோதனை, ஆடு, மாடுகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கு, கோமாரி உள்ளிட்ட நோய்களுக்கு, சிகிச்சை அளிப்பதாக கூறப்படுகிறது.கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்ட மாடுகளுக்கு, போலி டாக்டர்கள் மூலம் சிகிச்சை அளித்ததால், கால்நடை உயிரிழப்பு சம்பவம் அதிகரித்ததாக, புகார் எழுந்துள்ளது. போலி டாக்டர்களின், தவறான சிகிச்சை முறைகளால், கால்நடை உயிரிழப்பு, மலட்டு தன்மை ஏற்படுவதால், விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர்.தமிழகம் முழுவதும், போலி கால்நடை டாக்டர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக, அரசு டாக்டர்கள்

குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர். வாயில்லா ஜீவன்களின் உயிர்களை காப்பாற்றவும், கால்நடை இனவிருத்தி அதிகரிக்கவும், போலி டாக்டர்கள் மீது, கால்நடை பராமரிப்பு துறை மற்றும் தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கால்நடை விவசாயிகள், கோரிக்கை விடுத்துள்ளனர்.

**"ஹைபிரிட்' மாதுளை அறுவடைகொளத்தூர் விவசாயிகள் சாதனை**

**மேட்டூர்:** கொளத்தூர் பகுதியில் மாதுளை சாகுபடி செய்த விவசாயிகள், இரண்டரை ஆண்டு உழைப்புக்கு பின், அறுவடை துவக்கியுள்ளனர்.மேட்டூர் தாலுகாவில் உள்ள கொளத்தூர் ஒன்றியம் வறட்சியான பகுதி. இப்பகுதி விவசாயிகள் கிணறு, போர்வெல் நீர் பாசனத்தை நம்பியே பயிர் சாகுபடி செய்கின்றனர். நெல், மஞ்சள், மிளகாய், வாழை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்த போதிலும், எதிர்பார்த்த வருவாய் ஈட்ட முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டனர்.விவசாயத்தை லாபகரமக செய்ய வேண்டும், என கருதிய கொளத்தூர் அடுத்த கும்பாரப்பட்டி, தொட்டிகிணறு சுற்றுப்பகுதி விவசாயிகள், 10 பேர் மஹாராஷ்டிரா, கர்நாடகா மாநிலத்தில், சுற்றுப்பயணம் செய்து, ஹைபிரிட் மாதுளை சாகுபடி நிலங்களை பார்வையிட்டனர். பின்பு அங்கிருந்து பாகுவா ரக மாதுளை செடிகளை கொள்முதல் செய்து, நிலங்களில் சாகுபடி செய்தனர்.இரு ஆண்டு அயராத உழைப்புக்கு பின், கடந்த ஆண்டு இறுதியில் செடிகளில் பூக்கள் உற்பத்தியானது. பின்பு காய்க்க துவங்கிய செடிகளில், தற்போது மாதுளை பழங்களை அறுவடை செய்து வருகின்றனர்.தொட்டி கிணறு விவசாயி சாமித்துரை கூறியதாவது:நான்கு ஏக்கரில், இரண்டரை ஆண்டுக்கு முன், சாகுபடி செய்த செடிகளில், முதன்முறையாக மாதுளை பழங்கள் அறுவடை செய்கிறோம். கொளத்தூரி இருந்து ஈரோடு, கரூருக்கு பழங்களை தரம் வாரியாக பிரித்து அனுப்புகிறோம்.வியாபாரிகள், 100 கிராமுக்கு குறைவான பழங்களை கிலோ, 60

ரூபாய்க்கும், 120 முதல், 150 கிராம் எடை பழங்களை, 70 ரூபாய்க்கும், 150 முதல், 200 கிராம் எடை பழங்களை கிலோ, 100 ரூபாய்க்கும், 200 முதல், 250 கிராம் எடை பழங்களை கிலோ, 110 ரூபாய்க்கும் கொள்முதல் செய்கின்றனர். முதல்கட்டமாக 1,100 கிலோ பழங்கள் அறுவடை செய்துள்ளோம்.இவ்வாறு அவர் கூறினார்.சோதனை முயற்சியாக மேற்கொண்ட ஹைபிரிட் மாதுளை சாகுபடி கைமேல் பலன் தந்துள்ளது கொளத்தூர் விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## முருங்கை விலை சரிவுகட்டு ரூ40ஆக குறைவு

**ஈரோடு:** கடும் பனியால், கடந்த மாதம், ஒரு கட்டு, 400 முதல், 500 ரூபாய் வரை விற்கப்பட்ட முருங்கைக்காய், சந்தைக்கு வரத்து அதிகரித்துள்ளதால், கட்டு, 40 ரூபாயாக சரிந்துள்ளது.பொதுவாக மற்ற காய்கறிகளை காட்டிலும், முருங்கைக்காய் சாம்பாருக்கு ருசியும், மணமும் தனி என்பதால், அனைத்து தரப்பு மக்களும் விரும்பி சாப்பிடுவர். தென்னிந்திய மக்கள் மட்டுமின்றி, வடமாநில மக்களும் முருங்கையை சமையலுக்கு அதிகம் பயன்படுத்துவர். முருங்கைக்கீரையில், இரும்புசத்து உள்ளதால் ஆரோக்கியத்துக்கு நல்லது. ஈரோடு மார்க்கெட்டுக்கு ஒட்டன்சத்திரம் சந்தையில் இருந்து, முருங்கை வரத்தாகிறது. மேலும் பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, பெருந்துறை உள்பட சுற்றுப்புற பகுதிகளில் இருந்து வருகிறது. மற்ற பகுதிகளை காட்டிலும், மூலனூர், காங்கேயம் முருங்கைக்காய் அதிக நீளம், திரட்சியுடன் சுவையாக இருக்கும் என்பதால், அதன் விலை சற்று அதிகமாக இருக்கும்.இதுகுறித்து வியாபாரி காஜா கூறியதாவது: கடந்த மாதம் ஜனவரியில், வரத்து வெகுவாக குறைந்து, 20 காய்கள் கொண்ட கட்டு, 400 முதல், 500 ரூபாய் வரை அளவுக்கு ஏற்ப விற்பனையானது. தற்போது, பனி குறைந்து, வெயில் காலம் துவங்கி உள்ளதால், அதிகளவில் காய் பிடித்துள்ளது.இதனால் ஒட்டன்சத்திரம் மட்டுமின்றி, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், முருங்கை வரத்தாகிறது. எனவே கட்டு, 50 முதல், 40 ரூபாய் வரை சரிந்துள்ளது. இதனால் மந்தமாக இருந்த விற்பனையும், தற்போது

சூடுபிடித்துள்ளது. விலை சரிந்துள்ளதால், மக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர், என்றார்.

## உலர் களங்கள் இல்லாததால் மிளகாய் விவசாயிகள் கவலை

**முதுகுளத்தூர்:** முதுகுளத்தூர் சுற்றுவட்டார கிராமங்களில் களங்கள் இல்லாததால், மிளகாய்களை உலர வைப்பதில் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர். முதுகுளத்தூர் தாலுகாவிற்குட்பட்ட கீழத்தூவல், பிரபக்களூர், முத்துவிஜயபுரம், காக்கூர், குமாரகுறிச்சி, புழுதிக்குளம், கேளல் உட்பட 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில், 1,600 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு, மகசூல் பருவத்தை எட்டியுள்ளது. போதிய மழை இல்லாததால் மிளகாய் செடிகள் வளர்ச்சி குன்றியும், விளைச்சல் குறைவாகவும் உ<ள்ளது. இருப்பினும், விவசாய நிலங்களில் "போர்வெல்' போட்டு அதன் மூலம் தண்ணீர் பாய்ச்சி விவசாயிகள் மிளாய் செடிகளை காப்பாற்றினர். மிளகாய்களை காயவைக்க, கிராமங்களில் உலர் களங்கள் இல்லை. இதனால், விளைந்த மிளகாய்களை, கண்மாய், குளங்கள், கரைகளில் உலர வைக்கும் அவலத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன், சிறப்பு நிதி திட்டங்களிலிருந்து, ஊராட்சி பகுதிகளில் விவசாயத்தை மேம்படுத்தும் வகையில், கிராமங்கள் தோறும் உலர் களங்கள் அமைக்கபட்டது. ஆனால், சில ஆண்டுகளாகவே இத்திட்டம், முடங்கியது. பிரபக்களூர், ராஜேந்திரன்: கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்தும், விவசாய நிலங்களில் போர்வெல் போட்டு மிளகாய் சாகுபடியை காப்பாற்றி வருகிறோம். இதனால், கூடுதல் செலவாகிறது. உலர் களங்கள் பற்றாக்குறையால் முழு மகசூல் இல்லாத நிலையிலும், ஓரளவு விளைந்த மிளகாய்களை காப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது, என்றார். எனவே, விவசாயிகளின் நலன் கருதி முதுகுளத்தூர் பகுதியில் உலர் களங்களை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## திருக்கழுக்குன்ற விவசாயிகளுக்கு இயற்கை சாகுபடி பயிற்சி

**திருக்கழுக்குன்றம் :** ஈச்சங்கருணையில், திருக்கழுக்குன்ற விவசாயிகளுக்கு, இயற்கை விவசாய காய்கனித் தோட்டப் பயற்சி பயிலரங்கம், நேற்று நடைபெற்றது. திருக்கழுக்குன்றம் அடுத்த ஈச்சங்கருணையில், கலாசார வளர்ச்சி மையம் மற்றும் தனியார் மேலாண்மை கல்லுாரி இணைந்து, இயற்கை விவசாய காய்கனித் தோட்டம் அமைப்பது குறித்து, விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிலரங்கம் நேற்று நடைபெற்றது. அப்போது, இயற்கையாக கிடைக்கும் தொழு உரம், பயிர் ஊக்கிகளை பயன்படுத்தி ரசாயன பயன்பாடு இல்லாமல், அன்றாடம் பயன்படுத்தப்படும் காய்கனிகளை, செலவு இல்லாமல் வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்வது குறித்து, திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடியைச் சேர்ந்த விவசாயி, கலைச்செல்வன் பயிற்சி அளித்தார்.

பயிலரங்கத்தில், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் படத்தைத் திறந்து வைத்த, திருக்கழுக்குன்றம் காவல் ஆய்வாளர் இளங்கோவன், ரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்தி, காய்கனி, பயிர்களை உற்பத்தி செய்வது குறித்து பேசினார்.

பயற்சியில், திருக்கழுக்குன்றம் வட்டத்திலிருந்து, 25 கிராமங்களைச் சேர்ந்த, 105 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு, இயற்கை முறையில், குழித்தட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கத்தரி நாற்று வழங்கப்பட்டது. பயிற்சி ஒருங்கிணைப்பாளர் சாமி உட்பட, பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சி காரணமாக புளி விளைச்சல் பாதிப்பு

**தியாகதுருகம் :** தொடரும் வறட்சி காரணமாக கள்ளக்குறிச்சி பகுதியில் புளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி உட்கோட்டத்தில் உள்ள மாநில

நெடுஞ்சாலை ஓரங்களில் பல ஆயிரம் புளியமரங்கள் உள்ளன. இவைகளில் காய்க்கும் புளியம்பழங்கள் குத்தகை விடப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது. இதன் மூலம் நெடுஞ்சாலைத்துறைக்கு கணிசமான வருவாய் ஆண்டுதோறும் கிடைக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவு பருவமழை பெய்யாமல் ஏமாற்றியது. இதனால் கள்ளக்குறிச்சி பகுதியில் வறட்சி நிலவுகிறது. நீர்நிலைகள் வறண்டு கிடக்கிறது. இதன் காரணமாக சாலையோர புளியமரங்களில் எதிர்பார்த்த அளவு காய்கள் காய்க்கவில்லை.

கடும் வறட்சியிலும் தழைத்து வளரும் தன்மை கொண்ட புளியமரங்கள் அனைத்திலும் நீர் பற்றாக்குறை காரணமாக பிஞ்சு உருவாவதற்கு முன்பே பூக்கள் உதிர்ந்தன. இதனால் புளியம்பழங்கள் இன்றி மரங்கள் வெறுமையுடன் காட்சியளிக்கிறது. வழக்கமாக கொத்து கொத்தாக காய்த்து தொங்கும் காய்கள் இல்லாமல் சாலையோர புளியமரங்கள் காணப்படுகிறது.

இதனால் குத்தகை எடுத்தவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். இதே சூழல் நீடித்தால் இப்பகுதியில் புளி உற்பத்தி பெருமளவு சரியும் நிலை ஏற்படும்.

## காய்கறி விற்பனைக்கு தனி இடம் ஒதுக்கப்படுமா?

**வால்பாறை :** எஸ்டேட் காய்கறிகள் விற்பனை செய்ய வால்பாறை புதுமார்க்கெட் பகுதியில் தனி இடம் வேண்டும் என்று தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர். வால்பாறை அடுத்துள்ளது வாகமலை டீ எஸ்டேட். இங்குள்ள எஸ்டேட்டில் பணிபுரியும் தொழிலாளர்கள் 5 ஏக்கர் நிலப்பரப்பில் காய்கறிகள் விவசாயம் செய்து வருகின்றனர். நூல்கோல், கத்தரி,கேரட், பீன்ஸ், அவரை, கீரைவகைகள் பயிரிட்டு, வாரம் தோறும் வால்பாறையில் சந்தைநாளான ஞாயிற்றுக்கிழமைகளில் காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர். இயற்கையான உரத்தில் தயாரிக்கப்பட்ட எஸ்டேட் காய்கறிகள் என்பதாலும், பிற கடைகளில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளை விட மலிவு விலை என்பதாலும் பொதுமக்கள் அதிக அளவில் விரும்பி வாங்குகின்றனர். வால்பாறை காய்கறி மார்கெட்டில் எஸ்டேட்

பகுதியிலிருந்து கொண்டுவரப்படும் காய்கறிகள் விற்பனை செய்ய தனி இடம் இல்லை. இதனால் நடைபாதையில் விற்பனை செய்து வருகின்றனர். வால்பாறை நகராட்சி சார்பில் எஸ்டேட் பகுதியிலிருந்து கொண்டுவரப்படும் காய்கறிகள் விற்பனை செய்ய புதுமார்க்கெட் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் தனி இடம் ஒதுக்க வேண்டும் என்பது இவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## வேளாண் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

தமிழக அரசு பட்ஜெட்டில், வேளாண்துறை சார்ந்த பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதில், பல்வேறு நிதி ஒதுக்கீடுகளுக்கு உடுமலை பகுதி விவசாயிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.
மதுசூதனன்: (தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர்) பயிர்க்கடன் இலக்கு 5 ஆயிரம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது; மாநில நதிகள் இணைப்பிற்கு நிதி ஒதுக்கீடு, வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் என விவசாய சாகுபடிக்கு பல்வேறு முக்கிய நிதி ஒதுக்கீடுகள் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கதக்கதாகும். பயிர்காப்பீட்டு திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முறையாக விவசாயிகளுக்கு செல்வது குறித்து கண்காணிக்கப்பட வேண்டும். திருப்பூர் மாவட்ட விவசாயிகள் அதிகளவு எதிர்பார்த்த நல்லாறு, ஆனைமலையாறு மற்றும் அவிநாசிஅத்திகடவு திட்டங்களுக்கு அறிவிப்பு இல்லாதது ஏமாற்றமளிக்கிறது.
பெரியசாமி: (இந்திய விவசாயிகள் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர்) பட்ஜெட்டில் பால் பண்ணைகளை தரம் உயர்த்த 25 கோடி ரூபாய்; நீரியியல் ஆய்வுக்கு 329 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிற்கு பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது வரவேற்கதக்கதாகும். மாநில நதிகளை இணைப்பது என்ற முக்கிய திட்டத்திற்கு 119 கோடி ரூநாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பயிர்க்கடன் இலக்கு உயர்த்தப்பட்டுள்ளதால் சிறு, குறு விவசாயிகள் பயன்பெறுவார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் மற்றும் விளைநிலங்களின் வழியாக செயல்படுத்தப்படும் திட்டங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை உயர்வு குறித்த அறிவிப்பு இல்லாதது ஏமாற்றமளிக்கிறது. மீரான் மொய்தீன் வக்கீல், பொள்ளாச்சி: கோர்ட் மேம்பாட்டுக்கு தமிழக பட்ஜெட்டில் ரூபாய் 783.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கதக்கது. நீதி துறைக்கு தேவையான உள்கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும். நீதி துறையினை முழுமையாக கணினி மயமாக்க வேண்டும். மேலும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை கணக்கில் கொண்டு நீதிமன்றங்களை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் நிலுவையில் உள்ள வழக்குகள் விரைவில் தீர்வு காண முடியும். நீதிதுறைக்கு வருகின்ற வருவாய் இனங்களை நீதிதுறையின் மேம்பாட்டுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

## காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்: பொள்ளாச்சி நகராட்சி துவக்கம்

**பொள்ளாச்சி :** பொள்ளாச்சி நகராட்சியில், சேகரமாகும் காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கான பூமி பூஜை நடந்தது. சிறப்பு நிலை நகராட்சியாக உள்ள பொள்ளாச்சி நகராட்சி 13.87 சதுர கி.மீ., பரப்பளவு கொண்டுள்ளது. நகராட்சியில், 36 வார்டுகளில், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த நகராட்சியில், 60 டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு, உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. இதில், 42 டன் குப்பைகள் மக்கும் குப்பையாகவும், 12 டன் குப்பைகள் மக்காத குப்பைகளாகவும் பிரிக்கப்படுகிறது. நகராட்சிப்பகுதியில் உள்ள காந்தி சந்தை, திரு.வி.க., சந்தை, தேர்நிலை சந்தை, உழவர் சந்தை, பூ மார்க்கெட், உணவு விடுதிகள் மற்றும்

பழக்கடைகள் ஆகியவற்றிலிருந்து தினசரி 10 டன் காய்கறி கழிவுகள், பழக்கழிவுகள் மற்றும் உணவு விடுதியிலிருந்தும் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. மீதமுள்ள 38 டன் கழிவுகள் நகர்ப்புற பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படுகிறது. இந்த காய்கறி, பழங்கள் மற்றும் உணவு கழிவுகளிலிருந்து, இயற்கை எரிவாயு (பயோகியாஸ்) தயாரிக்க மாட்டு சந்தை அருகே 500 சென்ட் பரப்பளவில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2013-14ம் ஆண்டில்,ரூ.90 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு பூமி பூஜை நடந்தது. கமிஷனர் சுந்தராம்பாள் முன்னிலை வகித்தார். நகராட்சி தலைவர் கிருஷ்ண குமார் தலைமை வகித்தார். பொறியாளர் ராஜா, கவுன்சிலர்கள் ஜேம்ஸ் ராஜா, வசந்த் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். நகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: மார்க்கெட்டுகளிலிருந்து சேகரிக்கப்படும் காய்கறி, பழங்களின் கழிவுகளை கொண்டு, அதிலிருந்து கார்பன்-டை-ஆக்சைடை பிரித்து, எடுக்கப்படுகிறது. அதன்பின், கிடைக்கும் சுத்தமான மீத்தேனை எடுத்து ஜெனரேட்டர் இயக்கப்பட்டு, அதன் மூலம் மின்சாரம் தயா ரிக்கப்படுகிறது.

கழிவுகளிலிருந்து பெறப்படும் இயற்கை எரிவாயுவை மின் ஆக்கிகள் மூலம் மின்சாரமாக சேமிப்பு செய்யப்பட்டு, நகராட்சிக்கு சொந்தமான கட்டடங்களுக்கு மின் வினியோகம் செய்யப்படும்.இதுபோன்று, மனித கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க நகராட்சி மூலம் 20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, பஸ்ஸ்டாண்ட் அருகே இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## புருசடை உடைப்பு திறந்தவெளி சிறையில் விரைவில் ஒருங்கிணைந்த "அக்ரி' பண்ணை

**சிவகங்கை**: காளையார்கோவில் அருகே துவக்கப்பட்டுள்ள,திறந்த வெளிச்சிறையில் கைதிகளுக்கு உதவும் வகையில் ஒருங்கிணைந்த "அக்ரி' பண்ணை திட்டம் அமைக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.புருசடை உடைப்பு எனுமிடத்தில் சமீபத்தில் திறக்கப்பட்ட இச்சிறைச்சாலை 84 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது. ஆயுள் தண்டனை பெற்ற, மத்திய சிறைகளில் வைக்கப்பட்டுள்ள 150 தண்டனை கைதிகளை இங்கு தங்க வைத்து, அவர்களுக்கு பல்வேறு பயிற்சி அளித்து, தண்டனை காலத்திற்கு முன்னரே வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவர். இங்கு முதல் கட்டமாக மதுரை, திருச்சி உட்பட பல்வேறு சிறைகளில் இருந்து 35க்கும் மேற்பட்ட தண்டனை கைதிகள் இங்கு தங்கியுள்ளனர். தினமும் சிறை வளாகத்திற்குள் முள், புதர் செடிகளை அகற்றும் பணியில் தற்போது இவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வளாகம் முழுவதும் சுத்தமான பின், காய்கறி தோட்டம், ஆடு, கோழி வளர்த்தல், இயற்கை உரம் தயாரித்தல், கட்டடத்திற்கு பயன்படும் "சிமென்ட் ' கிராதி கற்கள் தயாரித்தல் போன்ற பல்வேறு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற் கொண்டுள்ளனர்.விரைவில், வேளாண் பண்ணை அமைக்கப்பட உள்ளது.

## வெண்டை விலை உயர்வு

**பொங்கலூர் :** வறட்சி காரணமாக, வெண்டை சாகுபடி பரப்பு மிகவும் குறைந்து விட்டதால், உள்ளூர் விளைச்சலில் சரிவு ஏற்பட்டுள்ளது. தண்ணீர் வசதியுள்ள சில விவசாயிகள் மட்டுமே வெண்டை சாகுபடி செய்துள்ளனர். தேவைக்கு வெளியூர் வரத்தையே அதிகமாக நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், விலை கிடுகிடுவென உயர்ந்து விட்டது. தற்போது ஒரு கிலோ 40 ரூபாய் வரை விலை போகி றது. இதனால், வெண்டை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 6000 மாடுகளுக்கு காப்பீடு ஆவின் திட்டம்

**மதுரை:** மதுரை ஆவினில் பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு காப்பீடு செய்ய உள்ளனர்.மதுரை ஆவின் நிறுவனம் பால் உற்பத்திக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மழையின்மையால் வறட்சி தாண்டவமாடும் தற்போது, பசுக்கள் குறைவாகவே பால் கறக்கின்றன. இருப்பினும் தற்போதைய நிலையில் ஆவினுக்கு 2 ஆயிரம் லிட்டர் அளவுக்கு குறைவாக வருகிறது. அதேசமயம், தனியார் நிறுவன பால் விலை லிட்டருக்கு ரூ. 3 முதல் 5 வரை அதிகரித்து விற்பதால், பலர் ஆவின் பால் வாங்க ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் ஆவின் பாலுக்கு 'டிமாண்ட்' ஏற்பட்டுள்ளது.இந்நிலையில், பால் உற்பத்தியை பெருக்க, பசுக்களுக்கு தீவனம் வழங்குவதற்கு மதுரை ஆவின், மானியம் அளிக்கிறது. 825 ரூபாய் மதிப்பிலான, 50 கிலோ எடையுள்ள ஒரு மூடை தீவனம், 625 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. இதில் ஒரு கிலோவுக்கு ரூ. 4 மானியம் என, மூடைக்கு 200 ரூபாய் மானியம் அளிக்கப்படுகிறது. ஒரு லிட்டர் பாலுக்கு கால் கிலோ என்ற விகிதத்தில் மானியம் தருகிறது, அரசு.'மினரல் மிக்சர்' எனப்படும் தாது உப்பு கலவையை 50 சதவீத மானியத்தில் வழங்குகிறது. மேலும் மாடுகளுக்கு தீவனமாக அளிக்கப்படும் புற்களை வெட்டும் கருவியும் மானியத்தில் வழங்குகிறது. 17 ஆயிரத்து 500 மதிப்புள்ள கருவியை 75 சதவீத அரசு மானியத்தில் 63 பேருக்கு வழங்க, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். விருப்பமுள்ள பால் உற்பத்தியாளர்கள், ஆவின் பொதுமேலாளரை அணுகலாம். தவிர, 6 ஆயிரம் கால்நடைகளுக்கு காப்பீடு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தோட்ட தொழிலாளர் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை

**கூடலூர் :** கூடலூரில் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்காக தேயிலை வாரியம் சார்பில் 14.5 லட்சம் ரூபாய் கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது.

கூடலூர் நாடார் திருமண மண்டபத்தில் தேயிலை வாரியம் சார்பில், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. தேயிலை வாரிய உதவி இயக்குனர் ரமேஷ் வரவேற்றார்.

தேயிலை வாரிய துணை தலைவர் கோஷிபேபி பேசுகையில், ""கூடலூரில் உள்ள தேயிலை வாரிய அலுவலகம் தரம் உயர்த்தப்படும். தேயிலை வாரியம் வழங்கி மானியத்தில் 60 சதவீதம் இப்பகுதி விவசாயிகளுக்கு கிடைத்துள்ளது. தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளை விளையாட்டில் ஊக்குவிக்க, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது," என்றார்.

தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசுகையில், ""தேயிலை வாரிய நலத்திட்டங்கள் தற்போது நேரடியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகையாக, 2 கோடி ரூபாய் வழங்க முயற்சித்து வருகிறோம். தற்போது, 60 தொழிலாளர்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்காக, 14.5 லட்சம் ரூபாய் கல்வி உதவி தொகையும், தேயிலை பராமரிப்புகாக 20 எஸ்.சி., விவசாயிகள் 1.30 லட்சம் ரூபாய் நிதியும், 100 சதவீதம் மானியத்தில் தலா இரண்டு எஸ்.சி., விவசாய குழுக்களுக்கு, இலை பறிக்கும் இயந்திரம், கவாத்து வெட்டும் இயந்திரம் வழங்கப்படுகிறது,"என்றார். தொடந்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. விழாவில், கூடலூர் கல்லூரி முதல்வர் வடிவேல், தொழிற் சங்க நிர்வாகிகள், பாலன், செய்துமுகமது, பாலன், சுப்ரமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர். தேயிலை தோட்ட ஆலோசகர் சுனில்குமார் நன்றி கூறினார்.

## இலவச ஆடுகள் திட்டத்தில்மாவட்ட இலக்கு பூர்த்தி

**திண்டுக்கல்**: மாவட்டத்தில் 5 ஆயிரத்து 400 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் மொத்தம் 21 ஆயிரத்து 600 ஆடுகள் கடந்த ஆண்டில் கால்நடைத்துறையினரால் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் அந்தந்த

மாவட்டங்களில் உள்ள கால்நடைத்துறையினர் தகுதியான பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகளை வழங்க வேண்டுமென அரசு உத்தரவிட்டிருந்தது. திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டில் 5 ஆயிரத்து 400 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம், 21 ஆயிரத்து 600 ஆடுகள் வினியோகிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கடந்த ஆண்டிற்கான இலக்கினை பூர்த்தி செய்திருப்பதாக கால்நடைத்துறையினர் தெரிவித்தனர்.கிராமங்களில் ஆடுகளின் இனப்பெருக்கத்திற்கேற்ப தீவன உற்பத்தியை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மானிய விலையில் அகத்தி கீரை நாற்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. விளைநிலங்களின் வரப்புகளில் இவற்றை வளர்த்தால் ஓராண்டிற்குள் பலன் கிடைக்கும் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நோய்தாக்காமல் இருப்பதற்காக முகாம்கள் நடத்தப்படுவதாக கால்நடைத்துறையினர் தெரிவித்தனர்.

## வைக்கோல் வினியோகிக்கவியாபாரிகளுக்கு அழைப்பு

**திண்டுக்கல்** :மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ள மானிய விலை மையங்களுக்கு வைக்கோல் வினியோகிக்க விரும்பும் வியாபாரிகள் விண்ணப்பங்கள் மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர். வறட்சி காரணமாக திண்டுக்கல் மாவட்டத்தில் மானிய விலையில் வைக்கோல் வினியோக அரசு முடிவு செய்திருந்தது. இதற்காக வத்தலக்குண்டு, கோபால்பட்டி, வேடசந்தூர், குஜிலியம்பாறை, தேவத்தூரில் வைக்கோல் கிடங்குகள் திறக்கப்பட்டுள்ளன.

வைக்கோல் வினியோகிக்க விரும்பும் வியாபாரிகள், பிப்., 20 பகல் 2 மணி வரை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெறலாம்.அதை பூர்த்தி செய்து பிணையத்தொகை ரூ. 10 ஆயிரத்திற்கான வரைவோலையை மண்டல இணை இயக்குனர் மற்றும் துணை இயக்குனர், கால்நடை பராமரிப்பு என்ற பெயருக்கு எடுத்து விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். குறைந்த தொகையை குறிப்பிட்டுள்ள வியாபாரிகளுக்கு வாய்ப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தென்னையில் ஊடுபயிராக சேம்பங்கிழங்கு சாகுபடி விவசாயிகள் ஆர்வம்

**தேவாரம்** :தென்னையில் ஊடுபயிராக, சேம்பங்கிழங்கு சாகுபடியில், தேவாரம் பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தனி கவனிப்பு தேவையில்லாத, குறைந்த நீர் தேவைப்படும் சேம்பங்கிழங்கு சாகுபடி, விவசாயிகளுக்கு லாபகரமாக உள்ளது.தேவாரம் முழுக்க விவசாயம் சார்ந்த பகுதியாகும். மலையடிவாரத்தை ஒட்டிய நிலங்களில் மானாவாரியாகவும், மற்ற பகுதியில் இறவை பாசன முறையிலும், சாகுபடி நடக்கிறது. நிலத்தடி நீர் மட்டம் நல்ல நிலையில் உள்ள தோட்டங்களில், தென்னை பயிரிட்டுள்ளனர். நிலையான விளையின்மை, கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறை, நிலத்தடி நீர் மட்டம் சரிவு போன்ற காரணங்களால் தென்னை விவசாயம் லாபகரமாக இல்லை. தற்போது, தென்னையில் ஊடு பயிராக சேம்பங்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.விவசாயி பாஸ்கரன் கூறுகையில்,""சோம்பு அறுவடை செய்யும் போது, கிழங்கை எடுத்து, பின் தூர் பகுதியை வெட்டி நாற்று போல வளர்க்கப்பட்டு, தென்னை மரத்தின் தூரை சுற்றிலும் நடவு செய்யப்படுகிறது. தென்னைக்கு பாய்ச்சப்படும் நீரிலிருந்து சேம்பு உறிஞ்சுகிறது. கூடுதல் நீரை உறிஞ்சாததால், தொடர்ந்து நீர் பாய்ச்ச தேவையில்லை. பத்து மாதம் விளைந்த கிழங்கு, மொத்த வியாபாரிகள் மூலம் கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது. மருத்துவ குணம் கொண்ட உணவுப் பொருளாக சேம்பு இருப்பதால், கிலோ 50 ரூபாய் வரை மொத்த விலையில் விற்கப்படுகிறது," என்றார்.-

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சேலம் இடைப்பாடியில் ரூ9 கோடிக்கு பருத்தி விற்பனை



**இடைப்பாடி:** இடைப்பாடியில் 3 நாட்கள் நடந்த ஏலத்தில் 37 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ9 கோடிக்கு ஏலம் விடப்பட்டது. சேலம் மாவட்டம், இடைப்பாடியில் சேலம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்க கிளைக்கு பருத்தி வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து, நேற்று 3வது நாளாக பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில், 1,500க்கும் மேற்பட்ட விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

சுமார் 8,000 மூட்டை பருத்தி விற்பனைக்கு வந்தது. இது, ரூ2 கோடியே 25 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. பி.டி. ரகம் குவிண்டால் ரூ4,950 முதல் ரூ5,750 வரையிலும், டிசிஎச் முதல் ரகம் ரூ6,950 முதல்ரூ7,600 வரையிலும், 2வது ரகம் ரூ6,100 முதல் ரூ6000 வரையிலும் ஏலம் எடுக்கப்பட்டது. வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை என 3 நாட்களில் நடைபெற்ற ஏலத்தில் 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். 37 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ9 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நாமக்கல் முட்டை விலை 300 காசாக நிர்ணயம்**



**நாமக்கல்:** நாமக்கல்லில் முட்டை விலை மேலும் 10 காசுகள் சரிந்து, ஒரு முட்டையின் விலை 300 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், முட்டை விலையில் மேலும் 10 காசுகள் குறைக்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 300 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. குளிர்காலம் முடிந்துள்ளதால் தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை சரிந்து வருகிறது. இதனால் விலையை குறைத்து விற்பனையை அதிகரிக்கும் வகையில் முட்டையின் விலையை எ ன்.இ.சி.சி குறைத்து உள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி யி54 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி யி66 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விபரம்: (பைசாவில்) பெங்களூரு-320, மைசூர்- 340, ஐதராபாத்- 300, மும்பை- 338, விஜயவாடா- 300, கொல் கத்தா- 335, பர்வாலா- 293, டெல்லி- 308 காசுகள்.

**வரத்து குறைந்ததால் கடலை எண்ணெய் டின்னுக்கு ரூ10 உயர்வு**



**விருதுநகர்:** நிலக்கடலை பருப்பு மூட்டைக்கு ரூ100 உயர்ந்துள்ளதால் கடலை எண்ணெய் டின் னுக்கு ரூ10 உயர்ந்துள்ளது. கடலை பருப்பு வரத்து குறைவாக வருவதால் நிலக்கடலை பருப்பு (80 கிலோ) மூட்டை ரூ3,600 லிருந்து ரூ3,700 என உயர்ந்துள்ளது. இதனால் கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ரூ1290லிருந்து ரூ1300 ஆக உயர்ந்துள்ளது. ஆந்திராவில் குண்டூர் வத்தல் மார்க்கெட்டிற்கு புதுவத்தல் வரத்து தினசரி 35 ஆயிரம் மூட்டைகளாக உள்ளது.

விருதுநகர் மார்க்கெட்டிற்கு தினசரி லோக்கல் வத்தல் 100 மூட்டை வரத்துள்ளது. புதுவத்தல் குவிண்டால் ரூ6,800 முதல் ரூ7,000 எனவும், ஏசி வத்தல் குவிண்டால் ரூ6,500 முதல் ரூ6,800. தேஜா வத்தல் குவிண்டால் ரூ12,000 முதல் ரூ13,000 வரை விற்பனையானது. லோக்கல் வத்தல் குவிண்டால் ரூ7,500 முதல் ரூ8,300 வரை விற்பனையானது.

**மேட்டூர் நீர்மட்டம் 50அடி**



**மேட்டூர்:** மேட்டூர் அணையின் நீர்மட்டம் 50.97 அடியாக குறைந்துள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 149 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து வினாடிக்கு 600 கனஅடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் நீரின் அளவைக் காட்டிலும் குடிநீருக்காக அதிக அளவில் தண்ணீர் திறக்கப்படுவதால் அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் 51.05 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 50.97 அடியாக சரிந்தது. அணையின் நீர் இருப்பு 18.42 டிஎம்சி.

**மாவட்டத்தில் கடும் வறட்சி காய்கறி சாகுபடி 40 சதவீதம் பாதிப்பு**

**கோவை, :** கோவை மாவட்டத்தில் வறட்சி, நீர் பற்றாக்குறையால் காய்கறி சாகுபடி 40 சதவீதம் குறைந்தது.

கோவை மாவட்டத்தில் 3.73 லட்சம் எக்டரில் விவசாய நிலப்பரப்பு இருக்கிறது. இதில் 20 ஆயிரம் எக்டரில் பயிறு வகைகளும், 50 ஆயிரம் எக்டரில் சிறு தானியங்களும், 26 ஆயிரம் எக்டரில் எண்ணெய் வித்து பயிர்களும், 35 ஆயிரம் எக்டரில் தோட்டக்கலை பயிர்களும் 1 லட்சம் எக்டரில் தென்னை, 10 ஆயிரம்

எக்டரில் கரும்பு, பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக கடும் வறட்சி காரணமாக நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காசோளம் சாகுபடி பரப்பு குறைந்தது. கடந்த மாத நிலவரப்படி 1,595 எக்டரில் நெல், 26,061 எக்டரில் சோளம், 68 எக்டரில் கம்பு, 15 எக்டரில் கேழ்வரகு, 4,829 எக்டரில் மக்காசோளம் பயிடப்பட்டிருந்தது. இந்த மாதம் சிறு தானிய பயிர் சாகுபடி பரப்பு மேலும் 30 சதவீதம் குறையும் வாய்ப்புள்ளது. தக்காளி 1,871 எக்டரிலும், வெங்காயம் 793 எக்டரிலும், மிளகாய் 402 எக்டரிலும், கத்தரி 306 எக்டரிலும், மஞ்சள் 1,048 எக்டரிலும், வாழை 5,491 எக்டரிலும், மரவள்ளி 298 எக்டரிலும் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த 2010ம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டில் ஜனவரி மாதம் காய்கறி பயிர் வகைகளின் சாகுபடி பரப்பு 40 சதவீதம் குறைந்துள்ளது.

நடப்பாண்டில் புதிதாக வாழை, தென்னை, கரும்பு, பருத்தி, மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். கோவை மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஓரளவு நிலத்தடி நீர்வளம் இருந்ததால் கிணற்று பாசனத்தின் மூலம், வாழை, மஞ்சள், கரும்பு போன்ற பணப்பயிர் மற்றும் காய்கறி உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி வந்தனர். தற்போது கடும் வறட்சியாலும், நிலத்தடி நீர் மட்டம் சரிவினாலும் கிணற்று நீர் பெற முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். அதிக தண்ணீர் தேவைப்படும் பயிர் சாகுபடியை கைவிட்டு குறைந்த தண்ணீர் தேவைப்படும் மாற்று பயிர் திட்டத்தை செயல்படுத்த விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தண்ணீர் பற்றாக்குறையால் ஆலாந்துறை, தொண்டாமுத்தூர், மத்வராயபுரம், தென்கரை, மாதம்பட்டி, வாளையார், மாவுத்தம்பதி பகுதியில் திராட்சை விளைச்சல் வெகுவாக சரிந்து விட்டது. விவசாயிகள் காய்கறி, தென்னை, வாழை, கரும்பு சாகுபடி குறைத்து விட்டதால் விவசாய விளை பொருட்களின் விலை உயரும் வாய்ப்புள்ளது.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

**கோவில்பட்டி, :**கோவில்பட்டி கோட்டத்தில் விவசாயிகளுக்கு விளைபொருள் அறுவடைக்கு பின் செய்நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி கோவில்பட்டி, கடம்பூர்,

எட்டயபுரம், விளாத்திகுளம் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் நடந்தது. கோவில்பட்டி நடந்த பயிற்சி முகாமிற்கு மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் மாரிமுத்து தலைமை வகித்தார். நெல்லை விற்பனைக்குழு செயலாளர் விஜயகுமார், மதுரை வேளாண்மை விற்பனை வாரிய உதவி இயக்குநர் அருணாசலம், உழவர்சந்தை துணை வேளாண்மை அலுவலர் விஜயன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரேவதி, நீலகண்டபிள்ளை, சீனிவாசன், சரவணகுமார் ஆகியோர் செயல்விளக்கமும் பயிற்சியும் அளித்தனர். ஏற்பாடுகளை ஒழுங்குமுறை விற்பனை கூட பொறுப்பாளர்கள் ராமகிருஷ்ணன், முருகானந்தம், பகவதி, நம்பி ஆகியோர் செய்திருந்தனர். இதேபோல் எட்டயபுரம், விளாத்திகுளம், கடம்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**தரமற்ற விதை விற்றால் நடவடிக்கை விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை**

**உடுமலை, :** தனியார் விதை விற்பனையாளர்கள் தரமற்ற விதைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விதை ஆய்வு துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.இதுகுறித்து விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம், பெதப்பம்பட்டி பகுதியில் உள்ள தனியார் விதை விற்பனையாளர்கள் நடப்பு பருவத்திற்கு விற்பனை செய்ய உள்ள காய்கறி விதைகளை நல்ல முளைப்பு திறன் உள்ளதாக இருக்க வேண்டும்.

அரசு அறிவுறுத்தியுள்ள விவரங்கள் அடங்கிய அட்டையை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் விதைப்பையில் இணைத்திருக்க வேண்டும். விவர அட்டையில் குறிப்பிடாத விதைகளை விற்பனை செய்ய கூடாது. தரமற்ற

விதைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

**வரத்து அதிகரிப்பு வெங்காயம் விலை வீழ்ச்சி தக்காளியும் விலை குறைந்தது**

**கரூர், :** வெங்காய வரத்து அதிகமானதால் கரூரில் பல்லாரி வெங்காயம் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தக் காளி விலையும் குறைந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக வறட்சி காரணமாக விளைச்சல் இல்லாததால் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்தன. மேட்டூர் நீர்வரத்து காரணமாக காய்கறிகள் விளைச்சல் தொடங்கியது.

கரூர் மாவட்டம் மற்றும் அருகில்உள்ள மாவட்ட பகுதிகளில் சின்னவெங்காயம் சாகுபடி ஆகியுள்ளது. மேலும் பல்லாரி வெங்காயம் வட மாநிலங்களில் இருந்து விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது.

ஒரு கிலோ ரூ.60, ரூ.70க்கு விற்பனையான வெங்காயம் விலை படிப்படியாக குறைந்து வருகிறது. வட மாநிலங்களில் இருந்து வரத்து அதிகம் காரணமாக உழவர் சந்தையில் பல்லாரி வெங்காயம் கிலோ ரூ.14க்கு விற்பனை செய்யப்படுகிறது. சின்ன வெங்காயத்தின் வரத்தும் அதிகஅளவில் இருப்பதால் இதன்விலையும் சரிந்து கிலோ ரூ.18க்கு விற்பனையானது.

முன்பு விலை அதிகமாக இருந்தபோது வெங்காயம் விற்பனையும் குறைவாக இருந்தது. உணவகங்களில் வெங்காயம் விலை உயர்வை கருத்தில்கொண்டு அத ற்கு மாற்றாக முட்டைகோஸ் போடப்பட்டது.தற்போது விலை குறைந்திருப்பதால் வெங்காயம் விற்பனையும் அதிகமாக உள்ளது. ஆம்லெட் போன்ற உணவுபொரு ட்களிலும் வெங்காயம் அதிக அளவில் சேர்க்கப்படுகிறது.கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உழவர் சந்தையில் தக்காளி கிலோ ரூ.45க்கு விற்பனை செய்ய ப்பட்டது. விளைச்சல் அதிகமானதை தொடர்ந்து ஓசூர் அருகே உள்ள ராயக்கோட்டை தக்காளி மார்க்கெ ட்டில் இருந்து அதிக அள வில் தக்காளி வரத்து தொ டங்கிவிட்டது. இது தவிர கரூர் மட்டுமின்றி வேடசந்தூர் போன்ற ஊர்களில்

இருந்தும் தக்காளி  கரூர் மாவட்டத்திற்கு விற்பனை க்காக கொண்டு வரப்படுகி றது. தக்காளி வரத்து அதி கமாகி வருவதால் விலை வீழ்ச்சியடைந்து வந்தது. கடந்த மாதம் ஒரு கிலோ தக்காளி ரூ.5ஆக இருந்தது. தற்போது கிலோ தக்காளி ரூ.7க்கு விற்பனையாகிறது.

வெங்காயம், தக்காளி தலா ஒருகிலோ வாங்கினாலே ரூ.100ஆனது. தற்போது விலை குறைந்திருப்பதால் அந்த காசுக்கு மற்ற காய்கறிகளையும் வாங்க முடிவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

## பூம்புகாரில் ரூ.148 கோடியில் மீன்பிடி துறைமுகம் அமைக்க மத்திய அரசு அனுமதி அமைச்சர் தகவல்

**தரங்கம்பாடி, :** பூம்புகாரில் ரூ.148 கோடியில் மீன்பிடி துறைமுகம் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்திருப்பதாக தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் தெரிவித்தார்.

நாகை மாவட்டம் தரங்கம்பாடி டேனீஷ் கோட்டை வளாகத்தில் சுற்றுலாத்துறை சார்பில் பாரம்பரிய சுற்றுலா விழா நேற்று முன்தினம் துவங்கியது. கலெக்டர் முனுசாமி தலைமை வகித்தார். சுற்றுலா அலுவலர் தமிழரசி வரவேற்றார். பூம்புகார் எம்எல்ஏ பவுன்ராஜ், ஒன்றியக்குழு தலைவர் ஜனார்த்தனம் முன்னிலை வகித்தனர். தொல்லியல்துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியை தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் திறந்து வைத்தார். செம்பனார்கோயில் ஒன்றிய அங்கன்வாடி பணியாளர்கள் செய்திருந்த பாரம்பரிய உணவு வகைகளை ருசி பார்த்தனர். இதை கோலப்போட்டிகளில் போடப்பட்டிருந்த கோலங்களை பார்வையிட்டனர். பின்னர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி அமைச்சர் ஜெயபால் பேசியதாவது:

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் வளர்ச்சியடைய முதலமைச்சர் அதிக நிதி ஒதுக்கீடு செய்து தனி கவனம் செலுத்தி வருகிறார். ஒரு காலத்தில் தஞ்சை மாவட்டத்திற்கே தரங்கம்பாடி தலைநகராக இருந்துள்ளது. மேலும் இந்த மாவட்டத்தில் தபால்கள் குதிரை வண்டி மூலம் சேகரிக்கப்பட்டு தரங்கம்பாடிக்கு

கொண்டு வந்து இங்கிருந்து தான் மற்ற ஊர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைக்க கடந்த காலத்தில் 21 ஆண்டுகள் முயற்சி செய்தனர்.

ஆனால் முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்றவுடன் பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைக்க அனுமதியளித்து திட்ட மதிப்பீட்டுக்கு ரூ.78.50 கோடி நிதி ஒதுக்கினார். அதன்பின் துறைமுகம் நவீன வசதிகளுடன் இருக்க வேண்டும் என்பதற்காக மேலும் ரூ.70 கோடி ஒதுக்கி ரூ.148.50 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசு அனுமதிக்கு அனுப்பப்பட்டது. இருதினங்களுக்கு முன் மத்திய அரசின் அனுமதி கடிதம் வந்துவிட்டது. இனி பணி துவங்கும். இதேபோல் தரங்கம்பாடிக்கும் கண்டிப்பாக மீன்பிடி துறைமுகம் வரும் என்றார். மயிலாடுதுறை சப்கலெக்டர் திவ்யதர்ஷினி, மாவட்ட ஊராட்சி தலைவர் சந்திரசேகரன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் கிருஷ்ணசாமி, பேரூராட்சி உறுப்பினர் அருண்குமார் உள்ளிட்டோர் பேசினர்.

விழாவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக தஞ்சை வள்ளி குழுவினரின் கிராமிய நடனங்கள், மதுரை பிரஷிதம் நாட்டியாலாவின் பரதநாட்டியம் மற்றும் பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது.

**3 இடங்களில் மானிய விலையில் கால்நடைகளுக்கான உலர் தீவனம் விற்பனை**

**திருத்தணி, :** மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி, பூண்டி, கனகம்மா சத்திரம் ஆகிய 3 இடங்களில் கால்நடைகளுக்காக மானிய விலையில் உலர் தீவனம் விற்பனை செய்யப்படுவதாக கலெக்டர் வீரராகவ ராவ் தெரிவித்தார்.

திருத்தணி அடுத்த கனகம்மாசத்திரம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் கால்நடைகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் விழா நேற்று நடந்தது. கலெக்டர் வீரராகவ ராவ் தலைமை வகித்தார். மண்டல இணை இயக்குனர் பன்னீர்செல்வம், துணை இயக்குனர் பாத்திமா, திருத்தணி உதவி

இயக்குனர் செல்வதுரை முன்னிலை வகித்தனர்.கலெக்டர் வீரராகவ ராவ் பேசுகையில், கால்நடைகள், நாட்டுக் கோழி வளர்ப்பு திட்டம், விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் போன்ற வேளாண்மை சார்ந்த திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. தற்போது வறட்சியால் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைக்கவில்லை. இதனால் அந்த தீவனங்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் கனகம்மா சத்திரம், பூண்டி, கும்மிடிப்பூண்டி ஆகிய பகுதிகளில் மானிய விலையில் வழங்கப்படும் என்றார்.

சிறப்பு விருந்தினராக அமைச்சர் ரமணா கலந்து கொண்டு பேசுகையில், மழை குறைவு காரணமாக தமிழகம் முழுவதும் உலர் தீவனம் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். ஒரு கிலோ ரூ.7.50க்கு வாங்கி கிலோ 2 ரூபாய்க்கு விவசாயிகளுக்கு வழங்குகிறோம். இதன் மூலம் இப்பகுதியினர் பயன்பெறுவர். மேலும், கால்நடைகளை சிறப்பாக வளர்க்கலாம் என்றார்.

மாவட்ட ஊராட்சி தலைவர் ரவிச்சந்திரன், வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) அபிராமி, ஒன்றிய குழு தலைவர் குணாளன், தாசில்தார் செல்வகுமாரி, ஒன்றிய குழு துணை தலைவர் ரமேஷ், நிலவள வங்கி தலைவர் பார்த்திபன், ஊராட்சி தலைவர் கஜபதி, கவுன்சிலர்கள் ராஜசேகர், தணிகாசலம், வருவாய் ஆய்வாளர் ராமன், விஏஓ செல்வம், கால்நடை மருத்துவர்கள் பிரேம்குமார், சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மானிய விலையில் வீரிய ரக தர்பூசணி விதை**

**விருத்தாசலம், :** விருத்தாசலம் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் மணிமொழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தர்பூசணி சாகுபடியை அதிகரிக்க செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்காக வீரிய ரக காஷ்மீரா விதைகள் மானிய விலையில் விவசாயிகள் வழங்கப்பட இருக்கிறது. இந்த ரகம் 70 முதல் 80 நாட்களில் வளரும் தன்மையுடையதாகும். அத்துடன் இந்த ரக தர்பூசணி, 7 முதல் 9 கிலோ வரை எடை இருக்கும். வீரிய ரக தர்பூசணி விதைகளை பெற விரும்பும் விவசாயிகள்

விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தின் இயங்கி வரும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். இதே போல் சின்ன வெங்காயத்தில் கோ 5 ரக விதைகள் மானியத்தில் வழங்கப்பட இருக்கிறது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**வெண்டை சாகுபடி:விவசாயிகள் தீவிரம்**

**காட்டுமன்னார்கோவில், :** காட்டுமன்னார்கோவில் பகுதியில் கோடை காலத்தில் தோட்டக்கலை பயிர்களை வியாபார நோக்கில் பயிரிடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக உள்ளனர்.

தோட்டக்கலை பயிர்களான வெண்டை, கத்தரி, கொத்தவரங்காய் ஆகிய பயிர்கள் அதிகம் பயிரிடப்படுகிறது. இதன் மூலம் வரும் வருமானம் விவசாயம் இல்லாத காலங்களில் பயன்படுத்துகின்றனர். இதில் வெண்டை சாகுபடி முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. அனைத்து மண் வகைகளிலும் பயிரிடப்படுகிறது. ஆழ்குழாய் கிணறு மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பு விதை நேர்த்தி செய்ய வேண்டும். சமமான பரப்பில் பாத்திகள் அமைத்து பார் அமைத்து விதை ஊன்றப்படுகிறது. 45 செ.மீ இடைவெளியில் 2 செ.மீ ஆழத்தில் விதைகள் ஊன்றப்படுகிறது. 10 நாட்களுக்கு பிறகு நன்றாக வளர்ந்த செடியை வைத்து கொண்டு மற்றவற்றை கலைக்க வேண்டும். 30 நாட்கள் கழித்து தோட்டக்கலை துறை பரிந்துரையின் பேரில் உரங்களை இடவேண்டும்.

பூச்சிகொல்லி மருந்துகளை 30,45,60 ஆகிய நாட்களில் தெளிக்க வேண்டும். விதைத்த 45ம் நாளிலிருந்து 2 நாட்களுக்கு ஒருமுறை அறுவடை செய்ய வேண்டும். 90லிருந்து 100 நாட்கள் வரை ஏக்கருக்கு 6 டன் வரை மகசூல் எடுக்கப்படுகிறது. குறுகிய காலத்தில் அதிக லாபம் தருவதால் விவசாயிகள் வெண்டை சாகுபடியில் தீவிரமாக ஈடுப்பட்டுள்ளனர்.

**ரூ22 லட்சத்துக்கு கொப்பரை விற்பனை**

**ஈரோடு, :** பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் முதல்தரம் கொப்பரை அதிகபட்சம் கிலோ ரூ.80.65க்கும், குறைந்தபட்சம் ரூ.79.35க்கும் விற்பனையானது.

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை பருப்பு ஏலம் நடைபெற்றது. மொடக்குறிச்சி சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 855 கிலோ கொப்பரை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இதில் முதல் தரம் கொண்ட கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ.77.15க்கும், இரண்டாம் தரம் கொப்பரை ரூ.70.85க்கும் விற்பனையானது. குறைந்தபட்சமாக ரூ.42.50க்கு ஏலம் போனது.

இதே போல தேங்காய் டன் ஒன்று ரூ.30 ஆயிரத்து 519க்கும், குறைந்த பட்ச விலையாக ரூ.24 ஆயிரத்து 250க்கும் ஏலம் போனது. இதே போல பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் முதல்தரம் ஏலம் கிலோ ஒன்று அதிகபட்சம் ரூ.80.65க்கும், குறைந்தபட்சம் ரூ.79.35க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரம் குறைந்தபட்சம் கிலோ ரூ.50.50க்கும், அதிகபட்சம் ரூ.78.50க்கும் ஏலம் போனது. பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு மொத்தம் 28 ஆயிரம் கிலோ விற்பனைக்கு கொண்டுவரப்பட்டதில் ரூ.22 லட்சத்திற்கு விற்பனையானது.

**குன்னூர் ஏல மையத்தில் 73% தேயிலை தூள் விற்பனை**

**குன்னூர், :** குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 7வது ஏலம் கடந்த வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் நடந்தது. இதில் மொத்தம் 14.36 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 9.78 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.58 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று இருந்தாலும் தரமான

தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர்.இதனால் 77 சதவீத தேயிலை தூள் மட்டுமே விற்பனையானது.
ஆனால் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் விலை உயர்ந்தது. இந்தவார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.57 முதல் ரூ.60 வரையிலும், உயர்வகை ரூ.110 முதல் ரூ.160 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.68 முதல் ரூ.72 வரையிலும், உயர் வகை ரூ.130 முதல்ரூ.190 வரை விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோ ஒன்றுக்கு ரூ.200, ஆர்த்தோடெக்ஸ் ரகத்தில் ரூ.252க்கு அதிகபட்சமாக விற்பனை செய்யப்பட்டது.
அடுத்த ஏலம் வரும் வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது. இதற்காக மொத்தம் 12.93 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. தேயிலை வரத்து குறைந்து வரும் நிலையில் ஏல மையங்களில் விற்பனை அளவும் அதிகரிக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## ஏற்றுமதி காய்கறி சாகுபடியில் புதிய தொழில்நுட்பம்

**ஊட்டி, :** ஊட்டி வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலா ண்மை முகமை திட்டத்தின் (அட்மா) மூலம் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு வகையான தோட்ட க்கலை மற்றும் அதன் பிற சகோதர துறைகளின் செயல் விளக்கங்கள், பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக தோட்டக்கலைத்துறை அட்மா திட்டத்தின் கீழ் ஊட்டி அருகேயு ள்ள ஊர்மலை கிராமத்தில் பசுமை குடிலில் குழித்தட்டு நாற்றங்கால் உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியில் முன்னோடி விவசாயி கோபால், அதிக வருமானத்தை தரக்கூடிய ஏற்றுமதி காய்கறி பயிர்களான லெட்யூஸ், செல்லரி, புரூக்கோலி, ஐஸ்பர்க், ரெட்கேபேஜ், பார்சலி போன்ற பயிர்களின் நாற்றுகளை புதிய தொழில்நுட்பமான குழித்தட்டுகளில் தென்னை நார் கழிவினை பயன்படுத்தி நாற்றுகள் உற்பத்தி செய்தல் குறித்து செயல்முறையுடன் விளக்கினார்.
மேலும் விதை நேர்த்தி, நாற்றுகளுக்கு அளிக்கப்பட வேண்டிய நீரில்

கரையக்கூடிய உரங்களின் பயன்பாடு மற்றும் பூச்சி பூஞ்சான மேலாண்மை குறித்தும் விளக்கினார். நாற்றங்காலில் உயிர் உரங்களான ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா, சூடோமோனாஸ் மற்றும் டிரைகோடொமா விரிடி போன்றவற்றின் செயல்பாட்டினை செயல்முறையுடன் அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ரம்யா பேசினார். அட்மா திட்டத்தின் தொழில்நுட்ப வல்லுனர் ஜான்பாஸ்கோ அட்மா திட்ட செயல்பாடுகள், பசுமை குடிலில் சிறிய இடத்தில் அதிக வருமானத்தை தரக்கூடிய மேற்கண்ட காய்கறிகளின் உற்பத்தி முறைகள் குறித்து, விற்பனை முறை குறித்தும் பேசினார்.
இப்பயிற்சியில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு சூரிய சக்தியில் இயங்கும் 155 பம்பு செட்டுகள்வேளாண் அதிகாரி தகவல்**

**பட்டுக்கோட்டை, :** தஞ்சை மாவட்டத்திற்கு சூரிய சக்தியால் இயங்கும் 155 பம்பு செட்டுகள் வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது என்று வேளாண் பொறியியல் துறை கண்காணிப்பு பொறியாளர் கூறினார். பட்டுக்கோட்டை வட்டம் கரம்பயம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜீவானந்தத்தின் மனைவி மல்லிகா என்பவரது வயலில் நிறுவப்பட்ட சூரிய சக்தியால் இயங்கும் (சோலார் முறை) பம்பு செட்டை தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மைப் பொறியியல்துறை கண்காணிப்புப் பொறியாளர் மணி, செயற்பொறியாளர் ஆரோக்கியசாமி, பட்டுக்கோட்டை உதவி செயற்பொறியாளர் மோகன்ராம் ஆகியோர் முன்னிலையில் இயக்கி பார்க்கப்பட்டது. இதுகுறித்து தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மைப் பொறியியல்துறை கண்காணிப்புப் பொறியாளர் மணி கூறுகையில், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் சூரியசக்தியின் வழியாக இயங்கக்கூடிய ஐந்து குதிரைத் திறன் கொண்ட 155 பம்பு செட்டுகள் சுமார் ரூ.4 கோடியே 71 லட்சம் அரசு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாணை பெறப்பட்டுள்ளது. இதன்படி தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 80 பம்பு

செட்டுகளும், திருவாரூருக்கு 60ம், நாகைக்கு 15ம், அரசு மானியத்தில் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த பம்பு செட்டுகள் ஐந்து குதிரைத் திறன் கொண்டதாகும். இதன் மூலம் சுமார் 200 அடி ஆழம் வரையிலான குழாய் கிணறுகளிலிருந்து பாசனத்திற்கு நீர் இறைத் துக் கொள்ளலாம். சூரிய சக்தியில் இயங்கும் பம்பு செட்டுகளுக்கான விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து ஏற்கனவே வேளாண்மைத்துறை மூலம் பெறப்பட்டு அவை வேளாண்மைப் பொறியியல் துறையால் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்புடைய விண்ணப்பதாரர்களுக்கு பம்பு செட்டுகள் வழங்க தற்பொழுது வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த சூரிய சக்தியில் இயங்கும் செட்டுக்கான மொத்த விலை ரூ.3 லட்சத்து 99 ஆயிரத்து 822. இதில் விவசாயி செலுத்த வேண்டிய பங்குத்தொகை ரூ.95 ஆயிரத்து 342. அரசின் மான்யம் ரூ.3 லட்சத்து 4 ஆயிரத்து 480. விண்ணப்பித்த முன்னுரிமை மற்றும் விவசாயிகள் பங்குத் தொகை செலுத்தியதன் முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் சூரிய சக்தியில் இயங்கும் பம்பு செட்டுகள் வழங்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி விவசாயிகளின் வயல்களில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவும் பணிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் தற்போது மேற்கொண்டு வருகின்றன என்றார்.

**பயறு வகை சாகுபடியை தீவிரப்படுத்த வேளாண் அதிகாரிகள் ஆய்வு**

**ராமநாதபுரம், :** மாவட்டத்தில் வறட்சியை தாங்கி வளரும் உளுந்து மற்றும் பயறு வகை சாகுபடியை தீவிரப்படுத்துவது தொடர்பாக வேளாண் துறையினர் விளைநிலங்களில் ஆய்வு மேற்கொண்டனர்.மழை பொய்த்தாலும் இருக்கும் நிலத்தடிநீரை பயன்படுத்தி மாவட்டத்தில் உளுந்து சாகுபடி செய்வது குறித்து வேளாண் துறையினர் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகின்றனர். இதற்கான செய்முறை பயிற்சிகளை விளைநிலங்களில் செயல்படுத்திருகின்றனர். மாவட்டத்தில் ஆர்.எஸ். மங்கலம், சோழந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் உளுந்து நல்ல விளைச்சலை தந்துள்ளது. விவசாயிகள் ஆர்வத்துடன் பயிர் செய்ய

வேண்டும் என வேளாண் இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி ஆலோசனையின் பேரில் அட்மா திட்டத்தில் பயறு சாகுபடி திட்டம் குறித்து செயல்விளக்க திடலை விவசாயிகள் பார்வையிட்டனர். விதை ஆய்வு துணை இயக்குநர் மணிமாறன், உதவி இயக்குநர் ராஜாராம், வேளாண் அலுவலர் உலகுசுந்தரம், துணை வேளாண் அலுவலர் தனதுரை, உதவி அலுவலர் நாகேஸ்வரி செயல்விளக்க திடல்களை பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.வேளாண் இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி கூறுகையில், வறட்சியை தாங்கி வளரும் பயிர்களை வேளாண் துறை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. மழையில்லாத காலங்களில் இருக்கும் தண்ணீரை பயன்படுத்தி பயறு வகை சாகுபடி செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சோழந்தூர், களாங்காப்புளி உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 5 ஏக்கரில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
வரிசை முறையில் விதை நடவு செய்வதன் மூலம் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு களை எடுத்தல், உரமிடுதல் பயிர் பாதுகாப்பு மேற்கொள்தல் பணிகளை சுலபமாக செய்யலாம்.நிலத்தின் ஈரத்தன்மைக்கு ஏற்ப விதைப்பு செய்த 30 மற்றும் 45 நாட்களில் 2 சதவீதம் டிஏபி கரைசலை தெளிக்கலாம். நடவு செய்து 75 நாட்களில் அறுவடை செய்து ஒரு ஏக்கருக்கு குறைந்த பட்சம் 350 முதல் 400 கிலோ வரை பெறலாம் என்றார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வரும் நிதியாண்டில் 8 இலட்சம் கோடி ரூபாய் விவசாய கடன் அளிக்க மத்திய அரசு திட்டம்**

புதுடெல்லி**,**

வரும் நிதியாண்டில் விவசாயிகளுக்கு 8 இலட்சம் கோடி ரூபாய் விவசாய கடன் அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். நடப்பு ஆண்டில்

சுமார்7 இலட்சம் ரூபாய் விவசாய கடன்கள் விவசாயிகளுக்கு வழங்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் ஊதிய உயர்வு

ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏப்ரல் 1–ந் தேதி முதல் இப்பணியாளர்களுக்கு ஊதியம் 11.4 சதவீதம் அதிகரிக்கும் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இதன்படி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு சம்பளம் ரூ.174.30–ஆக உயரும். தற்போது சராசரி சம்பளம் ரூ.156.40–ஆக உள்ளது.

மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் இத்திட்டத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்த முடிவு செய்துள்ளதால் மத்திய அரசுக்கு அடுத்த நிதி ஆண்டிலிருந்து (2014–15) ரூ.1,000 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ஒட்டுமொத்த அளவில் இந்த செலவினம் ரூ.30,000 கோடியாக இருக்கும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் நட்சத்திர திட்டங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இத்திட்டத்தில் பதிவு செய்துள்ள பல கோடிக்கான மக்களுக்கு, ஒரு நிதி ஆண்டில் குறைந்தபட்சம் 100 தினங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.100 ஊதியம் வழங்கப்படுகிறது.

இயற்கை ரப்பர் இறக்குமதி 20 சதவீதம் குறைந்தது

இயற்கை ரப்பர் இறக்குமதி ஜனவரி மாதத்தில் 20 சதவீதம் குறைந்து 19,696 டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலாண்டில் 24,205 டன்னாக இருந்தது. மத்திய அரசு இறக்குமதி வரியை உயர்த்தியதையடுத்து ரப்பர் இறக்குமதி செய்வது ஆதாயமாக இல்லை. இதனால், ரப்பர் இறக்குமதி குறைந்துள்ளதாக ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் இயற்கை ரப்பர் விலை சென்ற ஆண்டு நவம்பரில் கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குறைந்தது. இதனால், உள்நாட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இதனையடுத்து, இறக்குமதியை கட்டுப்படுத்தும் வகையிலும், உள்நாட்டு விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டும் டிசம்பர் மாதத்தில் இயற்கை ரப்பர் இறக்குமதி வரியை மத்திய அரசு 50 சதவீதம் அதிகரித்தது.

சர்வதேச அளவில் இயற்கை ரப்பர் உற்பத்தியில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் இருந்து இயற்கை ரப்பர் இறக்குமதி செய்யப்படுகிறது

நாமக்கல்லில் கோடை காலம் தொடங்குவதற்கு முன்பே தர்பூசணி விற்பனை சூடுபிடித்தது

நாமக்கல்லில் இந்த ஆண்டு கோடை காலம் தொடங்குவதற்கு முன்பே தர்பூசணி விற்பனை சூடுபிடிக்க தொடங்கி உள்ளது.

<u>மழைபொழிவு குறைவு</u>

நாமக்கல் மாவட்டத்தில் சராசரி மழை அளவு 900 மி.மீட்டர் ஆகும். கடந்த ஆண்டு 502 மி.மீட்டர் மட்டுமே மழை பெய்து உள்ளதால், கடும் வறட்சி நிலவி வருகிறது. குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதால், உள்ளாட்சி அமைப்புகள் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இது ஒருபுறம் இருக்க இந்த ஆண்டு கோடைக்காலம் தொடங்குவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. காலை முதல் மாலை வரை சூரியன் பொதுமக்களை சுட்டெரித்து வருகிறது. எனவே தண்ணீர் தாகத்தை தீர்க்க பொதுமக்கள் சாலை ஓரங்களில் உள்ள குளிர்பான கடைகளையும், இளநீர் கடைகளையும் நாடி செல்வதை காண முடிகிறது.

இதேபோல் கோடை தொடங்குவதற்கு முன்பே தர்பூசணியும் சாலை ஓரங்களில் ஆங்காங்கே விற்பனைக்கு குவிக்கப்பட்டு உள்ளன. நாமக்கல் நகரில் பஸ்நிலையம், திருச்சி ரோடு, மோகனூர் ரோடு, சேலம் ரோடு என அனைத்து பகுதிகளிலும் தர்பூசணி விற்பனை சூடுபிடிக்க தொடங்கி உள்ளது.

<u>தர்பூசணி விற்பனை</u>

திண்டிவனம் பகுதியில் இருந்து தர்பூசணி பழங்களை வாங்கி வரும் வியாபாரிகள் கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்கின்றனர். கடந்த ஆண்டுகளை ஒப்பிடும் போது தர்பூசணி பழங்களின் அளவு மிக சிறியதாகவே காணப்படுகின்றன.

தமிழகம் முழுவதுமே போதுமான மழை பொழிவு இல்லாத காரணத்தால், அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்களின் விளைச்சலும் குறைந்து இருப்பதாகவும், அதன் காரணமாக விலை சற்று உயர்ந்து உள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். விலையை பொருட்படுத்தாமல் பெரியவர், சிறியவர் என வயது வித்தியாசம் இல்லாமல் அனைவரும் தர்பூசணி பழங்களை வாங்கி தாகத்தை தீர்ப்பதை பார்க்க முடிகிறது.

**கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.8 லட்சத்துக்கு வாழைப்பழம்– தேங்காய் ஏலம்**

கோபிசெட்டிபாளையம்,

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.8 லட்சத்துக்கு வாழைப்பழம் மற்றும் தேங்காய் ஏலம் போனது.

வாழைப்பழம் ஏலம்

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்றுமுன்தினம் நடந்த ஏலத்திற்கு கோபிசெட்டிபாளையம் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் 5 ஆயிரத்து 600 வாழைப்பழத்தார்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் கதலி ரக வாழைப்பழம் ஒரு கிலோ 28 ரூபாய்க்கும், நேந்திரன் ரகம் ஒரு கிலோ 20 ரூபாய்க்கும் விற்பனை ஆனது.

செவ்வாழை தார் ஒன்று ரூ.670–க்கும், ரொபஸ்டா(தார்) ரூ.530–க்கும், தேன்வாழை(தார்) ரூ.480–க்கும், ரஸ்தாளி(தார்) ரூ.350–க்கும், மொந்தன் (தார்)ரூ.300–க்கும், பூவன்(தார்) ரூ.325–க்கும், பச்சைநாடன்(தார்) ரூ.270–க்கும் விற்பனை ஆனது.மொத்தம் வாழைப்பழங்கள் ரூ.7 லட்சத்துக்கு ஏலம் போனது. இந்த வாழைப்பழங்களை திருப்பூர், பெருந்துறை, ஊத்துக்குளி ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.

தேங்காய்

தேங்காய் ஏலத்திற்கு விவசாயிகள் 11 ஆயிரம் தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் தேங்காய் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.5–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.16–க்கும் விற்பனை ஆனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்திற்கு தேங்காய் ஏலம் போனது. தேங்காய் வரத்து குறைவாக இருந்ததால், கடந்த வாரத்தை விட இந்த வாரம் தேங்காய் ஒன்று ரூ.2 விலை உயர்ந்து ஏலம் போனது.

**தரங்கம்பாடியில் ரூ.148½ கோடியில் துறைமுகம் அமைச்சர் ஜெயபால் தகவல்**



**பொறையாறு, -**

தரங்கம்பாடியில் ரூ.148½ கோடி செலவில் துறைமுகம் கட்ட தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்று அமைச்சர் ஜெயபால் தெரிவித்தார்.

பாரம்பரிய சுற்றுலா விழா

நாகை மாவட்டம் தரங்கம்பாடியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பில் பாரம்பரிய சுற்றுலா விழா தொடங்கியது. விழாவிற்கு நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கினார். பூம்புகார் பவுன்ராஜ் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை உதவி கலெக்டர் திவ்யதர்ஷிணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுற்றுலா அலுவலர் தமிழரசி வரவேற்று பேசினார். அதனை தொடர்ந்து தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் புகைப்பட கண்காட்சியை திறந்து வைத்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ- மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

முதல்- அமைச்சர் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் சுற்றுலாத்துறைக்கு அதிக நிதி வழங்கி சுற்றுலா தலங்களை சீர்படுத்தி

சுற்றுலா பயணிகளை ஈர்த்த பெருமை அவரையே சாரும். ஒருகிணைந்த தஞ்சை மாவட்டத்திற்கு தரங்கம்பாடி தான் ஒரு காலத்தில் தலைநகராக விளங்கியது.

<u>நவீன துறைமுகம்</u>

இங்கு தான் முதல் முதலில் குதிரை வண்டி மூலம் தபால் வினியோகம் செய்யப்பட்டது. 1620-ம் ஆண்டு கட்டப்பட்ட டேனீஷ் கோட்டை மருத்துவ குணம் கொண்ட ஓசோன் காற்று, சீகன்பால்கு உருவாக்கிய முதல் தமிழ் அச்சிக்கூடம். இப்படி பல்வேறு வரலாற்றுக்கு சொந்தமான தரங்கம்பாடியின் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

இடங்களை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்க வேண்டும். முதல்-அமைச்சர் தேர்தல் வாக்குறுதியில் சொன்னது போல் பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைக்க உத்தரவிட்டார் அதற்காக ரூ.78½ கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கியது. மேலும் சகலவசதிகளும் கூடிய நவீன துறைமுகம் அமைக்க வேண்டும் என்ற காரணத்தினால் மேலும் ரூ.70 கோடிக்கு கூடுதல் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் சந்திரசேகரன், ஒன்றியக்குழு தலைவர் ஜெனார்த்தனம், பேரூராட்சி தலைவர் கிருஷ்ணசாமி, தரங்கம்பாடி தாசில்தார் அழகர்சாமி, டேனீஷ்கோட்டை காப்பாட்சியர் தங்கதுரை, செயல் அலுவலர் மான்அபுபக்கர், ஊராட்சி மன்ற தலைவர் செந்தில்நாதன், கண்ணன் உள்பட மீனவ பஞ்சாயத்தார்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ- மாணவிகள், வெளிநாட்டு சுற்றுலாபயணிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில் தொகுத்து வழங்கினார்.

**திருவாரூர் மாவட்டத்தில் தானிய பயிர்களை அதிக அளவில் பயிரிட நடவடிக்கை கலெக்டர் தகவல்**



**திருத்துறைப்பூண்டி,**

திருவாரூர் மாவட்டத்தில் தானிய பயிர்களை அதிக அளவில் பயிரிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக கலெக்டர் நடராசன் கூறினார்.

<u>மக்கள் நேர்காணல் முகாம்</u>

முத்துப்பேட்டையை அடுத்த இடும்பாவனத்தில் மக்கள் நேர்காணல் முகாம் நடந்தது. முகாமிற்கு மாவட்ட கலெக்டர் நடராசன் தலைமை தாங்கி, நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

முத்துப்பேட்டை ஒன்றி யத் தில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இந்த பகுதியில் மிளகு, மூங்கில் பயிரிட அரசு உதவி செய்யும். நெல் பயிரிடுவது தான் இப்பகுதி விவசாயிகளுக்கு முக்கியமாக இருந்தாலும், அறுவடை செய்த பின்னர் வயல்களில் அடுத்த சாகுபடி நடைபெறு வதற்கு முன்னால், தானிய வகை பயிர்களை அதிக அளவில் பயிர் செய்ய வேளாண்மை துறை மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

<u>நீர்நிலை பாதுகாப்பு</u>

அம்மா திட்டம் மூலம் பல்வேறு வகையில் மக்கள் பயனடைய தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. முத்துப்பேட்டை ஒன்றிய பகு தியில் நீர்நிலைகளை பாது காக்க பல்வேறு பணிகள் முடி வடைந்ததால், முத்துப் பேட்டை ஒன்றியம் பசுமை யாக மாறியுள்ளது.

இவ்வாறு கலெக்டர் கூறி னார்.

<u>நலத்திட்ட உதவிகள்</u>

முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை, வேளாண்மைத் துறை, வருவாய்த்துறை, வட்ட வழங்கல் துறை சார்பில் விவ சாய கருவிகள், இலவச வீட்டு மனைப்பட்டாக்கள், புதிய குடும்ப அட்டைகள், சலவை எந்திரம், தையல் எந்திரம் போன்ற நலத்திட்ட உதவி களை கலெக்டர் நடராசன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அதிகாரி மணிமாறன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெயலட்சுமிஅம்பிகாபதி, ஒன்றியக்குழு தலைவர் நட ராஜன், மன்னார்குடி உதவி கலெக்டர் சுப்பு, மாவட்ட சுகாதார துணை இயக்குனர் பரணிதரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் அமுதா மனோ கரன், பூவாணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**மண்ணச்சநல்லூரில் பயனாளிகளுக்கு கறவை பசுக்கள்–நலத்திட்ட உதவிகள் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்**



**மண்ணச்சநல்லூர்,**

மண்ணச்சநல்லூரில் நடந்த விழாவில் 446 பேருக்கு ரூ.33 லட்சத்தில் கறவை பசுக்கள், நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பூனாட்சி வழங்கினார்.

**நலத்திட்ட உதவிகள்**

மண்ணச்சநல்லூரில் அரசின் விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் வழங்கும் விழா, மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு கறவை பசுக்கள் வழங்கும் விழா நடைபெற்றது. திருச்சி புறநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் ரத்தினவேல் எம்.பி. முன்னிலை வகித்தார். கால்நடை பராமரிப்புத்துறை திருச்சி மண்டல உதவி இயக்குனர் டாக்டர் சின்னதுரை வரவேற்றார்.

திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் விழாவுக்கு தலைமை தாங்கி பேசியதாவது:–

விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம், வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் முதல் நோக்கம் இரண்டாவது வெண்மை புரட்சி ஏற்படுத்த வேண்டும் என்பது. இரண்டாவது நோக்கம் ஏழை ஆதரவற்ற கிராமப்புற மக்கள், விதவைகளுக்கு நல்ல வாழ்வாதாரம் ஏற்படுத்த வேண்டும் என்பது.

கடந்த இரண்டரை வருடத்தில் திருச்சி மாவட்டத்தில் 1350 கறவைப்பசுக்களும் 60 ஆயிரம் வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிராமப்புற ஏழை பெண்களின் பொருளாதாரம் முன்னேறியிருக்கிறது. பால் உற்பத்தி அதிகமாகி உள்ளது. கால்நடைகளுக்கு மான்ய விலையில் வைக்கோல் வழங்க மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.இவ்வாறு அவர் பேசினார்.

**நலத்திட்ட உதவிகள்**

விழாவில் அமைச்சர் பூனாட்சி சிறப்பு விருந்தினராக கலந்து கோண்டு மனம் திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகள் 20 பேருக்கு கறவை பசுக்கள், 37 பேருக்கு

அரசின் விலையில்லா கறவை பசுக்கள், 54 பேருக்கு விலையில்லா வெள்ளாடுகள், 24 பேருக்கு மான்ய விலையில் வைக்கோல் கட்டுகள் என 22 லட்சத்து 50 ஆயிரத்துக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முன்னதாக அமைச்சர் பூனாட்சி தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 311 மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சக்கர ரூ.9 லட்சத்து 92 ஆயிரத்து 96 மதிப்புள்ள 3 சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், ஊன்று கோல்கள், இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள், காதொலி கருவிகள், காலிபர்கள், செயற்கை அவயங்கள் வழங்கினார்.

விழாவில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ராஜேஸ்வரி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராமு, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அதிகாரி கருணாகரபாண்டியன், கலால் துறை உதவி ஆணையர் சரஸ்வதி, கோட்ட அதிகாரி சுலோச்சனா, லால்குடி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் சுரேஷ்குமார், ஒன்றிய குழு தலைவர் பரமேஸ்வரி முருகன், அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் ஜெயகுமார், பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், பேரூர் செயலாளர் துரை.சக்திவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பருத்தி சாகுபடியில் பருத்தி சாகுபடியில் புதிய தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்த விவசாயிகள் கோரிக்கை**

**பெரம்பலூர்,**

பெரம்பலூர்–வேப்பந் தட்டையில் பருத்தி சாகுபடியில் புதிய தொழில்நுட்பத்தை நடை முறைப்படுத்த விவ சாயிகள் தமிழ் செல்வன் எம்.எல்.ஏ.விடம் மனு கொடுத்து உள்ளனர்.

கோரிக்கை மனுபெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை மற்றும் பெரம்பலூர் ஒன்றியத்தை சேர்ந்த பருத்தி விவசாயிகள் பெரம்பலூர் எம்.எல்.ஏ. தமிழ்ச் செல்வனை சந்தித்து கோரிக்கை மனு கொடுத் தனர். அந்த மனுவில் கூறியிருப் பதாவது.

பெரம்பலூர் மற்றும் வேப் பந்தட்டை ஒன்றிய பருத்தி விவசாயிகள் 35 ஆண் டுகளாக பருத்தி விவசாயம் செய்து வருகிறோம்.

<u>கைவிடும் நிலை</u>

கடந்த 12 ஆண்டுக்கு முன்பு 2002 வரை சாதாரண ரக பருத்தி பயிர்செய்துவந்தோம். சாதாரண ரக பருத்தியில் காய்ப்புழுக்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்க அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்தை பயன்படுத்தியதால் 5–6 குவிண்டாலுக்கு மேல் மகசூல் எடுக்கமுடியவில்லை. பருத்தி விவசாயத்தை கை விடும் அளவிற்கு தள்ளப் பட்டோம்.

பி.டி. பருத்தி தொழில் நுட்பத்தில் 10 –12 குவிண்டால் கிடைப்பதுடன் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமும், பருத்தி சாகுபடியில் களைக் கொல்லியை தெளிக்கும்போது பருத்திக்கு எந்தவித பாதிப்பு இல்லாத அதே நேரத்தில் அதிக மகசூல் தரும் பி.டி. தொழில்நுட்பத்தை பயன்படுத் துமாறு அறிவுறுத்தி உள்ளது.

தமிழ்நாட்டில் 5 லட்சம் ஏக்கரில் பருத்தி பயிர் செய்யப் படுகிறது. இதில் 90 சதவீதம் 4.5 லட்சம் ஏக்கர் பி.டி. பருத்தி தொழில் நுட்பத்தை பயன் படுத்தி சாகுபடி செய்யப் பட்டு வருகிறது.

<u>புதிய தொழில் நுட்பம்</u>

ஆந்திரா. கர்நாடகம், மகா ராஷ்டிரா, பஞ்சாப், குஜராத் மாநிலங்களில் பரிசோதனை செய்யப்பட்டு அனுமதிக்கப் பட்டுள்ள பி.டி. பருத்தி சாகுபடி தொழில் நுட்பத்தை வேப்பந்தட்டை, பெரம்பலூர் பகுதி விவசாயிகள் பயன் படுத்திட அரசுக்கும், வேளாண்மைத் துறை, பருத்தி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பரிந்துரை செய்து பி.டி. தொழில் நுட்பத்தை பயன் படுத்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள் கிறோம்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்போது வேப்பந்தட்டை ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் கண்ணுசாமி மற்றும் நிர்வாகி கள் உடனிருந்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 'சூரியஒளிமின்சாரம்மூலம்ஒரேஆண்டில்மின்வெட்டைப்போக்கலாம்'



தன்னார்வத்தொண்டுநிறுவனங்கள்ஒத்துழைத்தால்ஒரேஆண்டில்தமிழகத்தைமின் வெட்டுஇல்லாதமாநிலமாக்கலாம்எனவீட்டில்மின்சாரம்தயாரித்துமின்வாரியத்துக் குவிற்பனைசெய்யும்விவசாயிசுப்புராயலுதெரிவித்தார்.

கடந்த 5-ம்தேதி, `வீட்டில்மின்சாரம்தயாரித்துமின்வாரியத்துக்குவிற்பனை; விழுப்புரம்அருகேஅதிசயிக்கவைக்கும்விவசாயி' என்கிறகட்டுரையை `திஇந்து' வெளியிட்டது.அதன்பின்விவசாயிசுப்புராயலுவின்தொடர்புஎண்ணைக்கேட்டுப்ப

லர்நம்அலுவலகத்துக்குத்தொடர்புகொண்டனர்.விவசாயிசுப்புராயலுவைஅவரதுஇல்லத்தில்சந்தித்தநம்மிடம்அவர்பேசியதாவது:

``வீடுகளுக்குமட்டுமல்லவிவசாயத்துக்கும்சூரியஒளியில்மின்சாரம்தயாரித்து 5 குதிரைத்திறன்கொண்டமோட்டாரைஇயக்கலாம்.தமிழகமுதல்வரின்மேற்கூரைசூரியச்சக்திமானியத்திட்டத்தின்கீழ்கடன்தொகையில்50 சதவீதம்மானியம்வழங்கப்படுகிறது. அதில்மாநிலஅரசு 30 சதவீதமும், மத்தியஅரசு20 சதவீதம்மானியமாகவழங்குகின்றன.

விவசாயிகள்அந்தந்தவேளாண்மைபொறியியல்துறையைஅணுகிமேலும்விவரங்களைப்பெறலாம்.வீடுகளுக்குப்பொருத்தமாவட்டத்தலைநகரங்களில்உள்ளதமிழ்நாடுஎரிசக்திமேம்பாட்டுமுகமையைத்தொடர்புகொண்டுவிவரங்களைப்பெறலாம்.மத்தியஅரசுமரபுசாராஎரிசக்திநிறுவனம்மூலம்இத்திட்டத்தைச்செயல்படுத்திவருகிறது.

விவசாயிகளுக்குப்பயிர்க்கடன், சிறுபால்பண்ணைக்கடன்களைக்கூட்டுறவுவங்கிகள்மூலம்வழங்குவதைப்போலச் சூரியஒளியில்மின்சக்திதிட்டத்துக்கானகடனையும்வழங்கலாம்.தமிழகத்தில்உள்ளதன்னார்வத்தொண்டுநிறுவனங்கள்இத்திட்டத்தைச்செயல்படுத்தமுன்வந்தால்ஒரே ஆண்டில்தமிழ்நாட்டில்மின்வெட்டேஇருக்காது.

கடந்த9 மாதங்களில்என்வீட்டில்தயாரித்த 1,000 யூனிட்மின்சாரத்தைமின்வாரியத்துக்குவழங்கியுள்ளேன். கடந்தமுறைஎன்னுடையபேட்டியில்ஒருயூனிட்சூரியஒளிமின்சாரத்தைரூ.2-க்குமின்வாரியத்துக்குவிற்பதாகக்கவனக்குறைவாகச்சொல்லிவிட்டேன்.

அந்த2 ரூபாய்என்பதுமின்சாரத்துக்கானஊக்கத்தொகைதானேதவிர, விலையில்லை.ஒருயூனிட்சூரியஒளிமின்சாரத்தைஇந்தவிலைக்குத்தான்வாங்கப்

போகிறோம்எனமின்வாரியம்இன்னமும்எனக்குத்தெரிவிக்கவில்லை.சூரியஒளியில் தயாராகும்மின்சாரத்தைமீட்டர்மூலம்கணக்கிட்டுவீட்டுக்குவெளியேஉள்ளமின்கம் பத்தில்உள்ளகம்பிமூலமேஅனுப்புகிறேன்'' என்றார்.

**சூரியஒளிமின்சாரம்தொடர்பாகமேலும்விளக்கம்பெற...**

சூரியஒளிமின்சாரம்தயாரித்துஅரசுக்குவழங்குவதுதொடர்பாகயாரைஅணுகுவதுஎ ன்றுதமிழ்நாடுஎரிசக்திமேம்பாட்டுமுகமையின், விழுப்புரம்மாவட்டப்பொறியாளர்யுவராஜ்விளக்குகிறார்:

விவசாயத்துக்குஉரியசூரியஒளிமின்சாரத்தைஉற்பத்திசெய்ய - வேளாண்மைபொறியியல்துறையில்தற்போதுவிண்ணப்பம்வழங்கப்பட்டுவருகிறது .வீடுகளில்பயன்படுத்தும்சூரியஒளிமின்சாரத்தைத்தயாரிக்கமாவட்டத்தலைநகரங்க ளில்உள்ள - தமிழ்நாடுஎரிசக்திமேம்பாட்டுமுகமையைத்தொடர்புகொள்ளலாம்.

சென்னைஅலுவலகத்தொடர்புஎண்: 044-28236592 என்றஎண்ணிலும்; விழுப்புரம்மாவட்டத்தில்உள்ளவர்கள் 7708064731 என்றஎண்ணிலும்தொடர்புகொள்ளலாம். மேலும்விவரங்களுக்கு www.teda.in என்றஇணையதளமுகவரியிலும்தொடர்புகொள்ளலாம்.